




ஸ்த்ரீ ரத்தினங்களை
வரிசைப்படுத்தி உங்கள்
உள்ளங்களில் ரத்தினமாக
ஜொலித்த அனுராதா ரமணன்
“பேசி ஜெயிக்கலாம் வாங்க”
என்கிறார். பேசுவோம்.. ஜெயிப்போம்!

வாங்க.. பேசலாம்!

என்ன, புருவம் நெற்றிக்கு மேல் போகிறது? உண்மையாகத்தான் சொல்கிறேன். பேசலாம் வாங்க..

''எதைப் பத்திப் பேசலாம் அனு?''

- கும்பகோணம் உமாமகேஸ்வரியின் கேள்வி இது!

ஆகா.. நமக்கெல்லாம் பேசுவதற்கு ஒரு 'டாபிக்' வேண்டுமா என்ன.. எந்தத் தலைப்பில் வேண்டுமானாலும், சில சமயங்களில், தலைப்பு, பார்டர், முந்தானை இதெல்லாம் இல்லாமலே நாம்தான் மணிக்கணக்கில் பேசுவோமே!

பேசினதால் அவதி! பேச வேண்டிய இடத்தில் பேசாமல் வாயில் கொழுக்கட்டையை அடைத்தாற் போல உட்கார்ந்திருந்ததால் வம்பு! பேசக்கூடாத இடத்தில் வந்து அதை உளறிக் கொட்டி, கிளறி கிண்டியதாலும் இரட்டிப்பு இம்சை!

வம்புப் பேச்சு, தெனாவட்டுப் பேச்சு, ராங்கிப் பேச்சு, அச்சுப் பிச்சுத்தனமாய் எதையோ சொல்லி விட்டு, இஞ்சி தின்ன எதுவோ மாதிரி பாவமாக முழிப்பது..

இப்படி நம் சாதனைகளைப் பட்டியலிட்டால் நீண்டு கொண்டே போகும்.

'உதார்'ரணத்துக்கு என் சிநேகிதி பாமாவைப் பாருங்கள்..

''எங்க வீட்டுக்காரருக்கு பிசினஸ்ல என்ன லாபம் வந்தாலும் எனக்கு நகையாதான் வாங்கிக் குவிப்பார். என்ன சொன்னாலும் கேக்க மாட்டார். பவுன் பத்தாயிரம் விக்கிற விலையில யும் எங்க வீட்டு நாய்க்குட்டிக்கு கூட தங்க அட்டிகை வாங்கிப் போட்டிருக்கார்னா பார்த்துக் கோயேன்'' என்று போகிறவர் வருகிறவரிடம் எல்லாம் பாமா உதார் விட்டுத் திரிவதெல்லாம் ஓகேதான். ஆனால், இன்கம் டாக்ஸ் சீனியர் ஆபீஸர் சக்கரபாணி மனைவி சந்திராவிடம் கூடவா இதை சொல்லித் தொலைப்பாள்.. தொலைத்தாளே!

ஒரு வாரம் ஆபீஸுக்கும் வீட்டுக்கும் விட்ட ரெய்டு பரேடில் அவள் கணவன் நாலு கிலோ குறைந்து நாயாய் பேயாய் அலைய, அப்போதுதான் மூக்குறிஞ்சிக் கொண்டே 'ஸாரி' கேட்டிருக்கிறாள். என்ன பயன்? அந்த வருடம் ஷேரில் கிடைத்த லாபத்தில் ஏதோ ஒன்றிரண்டு நகைகளை வாங்கப் போக, இவள் விட்ட உடான்ஸில் அஸ்திவாரமே ஆட்டம் கண்டுவிட்டது. இனி கோடி கோடியாகக் கொட்டினாலும் இவளுக்கென்று குண்டுமணித் தங்கம் கூட வாங்குவதில்லை என்று இவள் பிசைந்து போட்ட பழைய சாதத்தின் மீதே மாவடுவால் அடித்து சத்தியம் செய்திருக்கிறார் இவள் புருஷன்!

பக்கத்து வீட்டுக்காரி ராஜத்துக்கும் இப்படித்தான் அஷ்டம சனி அடிக்கடி நாக்கில் ஏறிக்கொண்டு டிஸ்கோதே ஆடும். பொண்ணு அசைவம் சமைப்பதில் படு கில்லாடி! ''நண்டு உடைக்கிறதே தனி கலை.. லாகவமா அதோட ஓட்டைத் திருகி காலையெல்லாம் தனித்தனியா பிச்சு.. காரம் போட்டு க்ரேவி வச்சா.. வாசம் ஊரையே கூட்டும்'' என்று அவள் சிலாகித்துச் சொன்ன இடம்.. மடிப்பாக்கம் சுகுணா மாமியின் வீடு!

பாவம், குழந்தை முதல் பெரியவர் வரை குமட்டல் எடுத்து நிலை-குலைந்த அந்த நாளை அவர்கள் ஆயுசுக்கும் மறப்பதாக இல்லை.

ராஜத்தின் அக்காள் வடிவும் எனக்கு நெருக்கம்தான். போன வாரம் அவள் பண்ணிய கலாட்டாவில் ஒரு குடும்பமே அவள் மீது கொலை வெறியோடு அலைகிறது. வேறொன்றும் இல்லை.. அவள் ஓரகத்தி பையனுக்கு பெண் பார்க்கப் போயிருக்கிறார்கள். பெரிய மனுஷியாச்சே என்று ஒரு மரியாதைக்கு வடிவையும் கூப்பிட்டிருக்கிறார்கள். அங்கே சபையில் போய் உட்கார்ந்ததில் இருந்து இவள் பேசியது எல்லாமே தத்துப்பித்து தத்துவங்கள்தான்.

''சாகுற வரைக்கும் ஒருத்தரை ஒருத்தர் பிரியாம இருக்குறதுதான் கல்யாணம்..''

''மாப்பிள்ளை டாக்டராக்கும்.. இந்தக் காலத்துல வியாதிகள்தான் எப்போ எப்படி வரும்னு யாருக்குமே தெரியறதில்-லையே. நாளைக்கே உங்கள்ல யாருக்காவது தீராத வியாதின்னா கூட அவன் பார்த்துக்க மாட்டானா என்ன..''

இப்படி இவள் பேசியதில் மாப்பிள்ளை வீட்டாருக்கே பேயறைந்திருக்கிறது. ஜலதோஷத்தில் கிச்சு முச்சுவென்று தும்மல் போட்டுக் கொண்டிருந்த மணப்பெண்ணின் மாமாவைக் கூட உள் அறையில் பூட்டி விட்டு கூடத்துக்கு வந்த பெண் வீட் டாருக்கு இது எப்படி இருந்திருக் கும்.

''பொண்ணு பிடிக்கலைனு மட்டும் பதில் வரட்டுமே.. சாவு, காவுனு பேசிக்கிட்டிருந்த அந்தப் பொம் பளை-யை உண்டு இல்லைனு பண்ணிடுறேன்'' என்று பெண்ணின் அண்ணன் வசனம் பேசிக் கொண் டிருக்கிறானாம். தேவையா இது?

இப்படியெல்லாம் வாயால் வகை தொகை இல்லாமல் வம்பிழுத்துக் கொண்டு வரும் நம் பெண்கள், கல் யாணம் கட்டின புதிதில் மாமியாரை யெல்லாம் எப்படி சமாளித் திருப்பார்கள் என்று எனக்கு மில்லியன் டாலர் சந்தேகமெல்லாம் அடிக்கடி எழும். அதற்கு பதில் சொல்லும் விதமாகத்தான் நடந்து கொண்டாள் என் சிநேகிதி காயத்ரியின் பெண் பிரதீபா..

பெயருக்குப் பின்னால் ஒன்றேகால் முழத்துக்குப் பட்டங்கள் எல்லாம் உண்டு. ஆனால் என்ன பயன்? சொந்த மாமியாரிடம் நல்லதாய் நாலு வார்த்தை பேசத் தெரியவில்லை. கேட்டால், ''இதை எல்லாமா எம்.டெக் கில் சொல்லித் தருகிறார்கள்..'' என்று நொடிக்கிறாள். மாமியார் டெக்னிக்கும் தேவையாக இருக்கிறதுதானே.. அதுவும் 'எம். டெக்'தான்!

அப்படி என்னதான் செய்தாள் என்கிறீர்களா? ஒன்றா.. இரண்டா?

கல்யாணமாகி கணவரோடு ஹைதராபாத்தில் குடியிருக்கும் பிரதீபா எப்போதாவதுதான் மாமியார் வீட்டுக்கு

வருவாள். அப்படித்தான் இரண்டாவது முறை மாமியார் வீட்டுக்கு வந்திருந்தாள். 'மகனுக்குப் பிடிக்குமே' என்று அந்தம்மா.. பெரியநாயகி, எண்ணெய் மிதக்கும் வத்தக் குழம்பும் உருளைக்கிழங்கு கறியும் செய்து கொண்டு வந்து வைக்க.. உடனே இவள் தன் திருவாயைத் திறந்திருக்கிறாள்!

''இத்தனை எண்ணெய் அவருக்கு ஒத்துக்காதும்மா! இதெல்லாம் ஹை கொலஸ்ட்ரால். அப்புறம்.. உங்களை மாதிரி அவரும் பிரஷர், ஷுகர்னு வியாதிக்காரராகிடுவார்!''



சொன்னதோடு மட்டும் நிற்காமல் ஏதோ ஜோக் அடித்தது போல அவள் விழுந்து விழுந்து சிரிக்க, முதல் கோணல் முற்றும் கோணலாகி முறுக்கிக் கொண்டாள் பெரியநாயகி.

அதன் பிறகு அவர்கள் சென்னைக்கு விசிட் அடிக்கும்போதெல்லாம் மகனிடம் குறைப்பட்டுக் கொள்வாள்.. ''யார்யாருக்கோ என்னென்ன பிடிக்கும்னு கேட்டுக் கேட்டு வாங்கிட்டு வர்றாளே உன் பெண்டாட்டி.. எனக்கு என்ன பிடிக்கும்னு என்னிக் காவது கேட்டிருக்காளா?''

''அவங்களுக்குப் பிடிச்சதையும்தான் வாங்கிக் கொடேன்'' - கெஞ்சலாக பிரதீபா காதுக்கு வந்தது அந்தக் குறை!

பெரியநாயகிக்கு என்ன பிடித்து விடப் போகிறது.. ஷுகர் நானூறுக்கும் ஐந்நூறுக்கும் இடையே சடுகுடு ஆடிக் கொண்டிருந்தாலும் ஸ்வீட் பாக்ஸைக் கண்டால், ''என்னவோ தெரியல.. அடிக்கடி லோ ஷுகரா ஆகிடுது..'' - இப்படிச் சொல்லி அரை கிலோவையாவது காலி பண்ணுவாள்.. ஹைதராபாத் திராட்சையென்றால் நண்டு சிண்டுகளிடம் கூட சண்டை பிடித்து ஒரு வெட்டு வெட்டுவாள். 'இதைத் தானே எதிர்பார்க்கிறீங்க' என்று இந்த முறை ஒரு பெட்டி திராட்சையோடு ரயிலேறி விட்டாள் பிரதீபா.

வீட்டுக்கு வந்தால்தான் தெரிகிறது.. பெரியநாயகிக்-குள் ஒரு சர்க்கரை ஆலையே இயங்கியதில், படுத்த படுக்கையாகி அம்மையார் ஆஸ்பத்திரியில் இருக்கிறார் என்பது! அவ்வளவுதான்.. மாமியாரைப் பார்க்க அட்டை டப்பாவோடு ஆஸ்பிடலுக்குக் கிளம்பி விட்டாள் குழந்தை.

அங்கே.. பச்சை நிற கட்டிலில் பாச்சைக் குஞ்சு மாதிரி கிடந்தாள் பெரியநாயகி. நர்ஸ், முதல் நாள்தான் டிரிப்ஸை எடுத்து விட்டு, ஒரு ஸ்பூன் சாதத்துக்கு ஒரு கிண்ணம் பாகற்காய் அரை வேக்காட்டுப் பொரியலை வைத்துக் கொண்டு, மல்லுக்கு நின்று கொண்டிருக்க..

நமது சமர்த்துக் குடம்.. அறிவுக் களஞ்சியம்.. 'ஜிங்'கென்று போய் நின்றதுமல்லாமல், அட்டைப் பெட்டியை நீட்டி, ஒரு மாதிரி சிரித்திருக்கிறது. (பாசமாக சிரிக்க வேண்டும் என்றுதான் நினைத்தா-ளாம். அது என்னவோ அந்த நேரத்தில் அப்படித்தான் சிரிக்க வந்ததாம்!)

பெரியநாயகி ஏற்கெனவே செம கடுப்பில் இருந்தாள். பசியும் பாகற்காயும் சேர்ந்து, அவளை முக்கால் சந்திரமுகி ஆக்கியிருந்தது.

''என்னது இது?''

''உங்களுக்குப் பிடிக்குமேனு ஹைதராபாத் திராட்சை வாங்கிட்டு வந்தேன். வாயில போட்டா, கல்கண்டா கரையும். ரெண்டு கிலோவும் உங்களுக்குத்-தான். அவ்வளவையும் நீங்களே.. ஏ.ஏ.. சாப்பிடுங்..''

பெரிய நாயகியின் விஸ்வரூபம் கண்டு மிரண்டு விட்டாள் பிரதீபா.

''ஏன் ஒருமாதிரி முழிக்கிறீங்க?''

''என்னை எதுக்காக ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கு தெரியுமா..?''

''ஷுகர்ன்னாங்க.. ஆனா, நீங்கதான் அதையெல்லாம் பெருசா எடுத்துக்க மாட்டீங்..களே..'' - நாக்கில் சனியேதான்!

ரணபத்ரகாளி ஆகிவிட்டாள் பெ.நாயகி.

''ஏண்டீ.. ரெண்டு கிலோ திராட்சை எந்தக் காலத் துலயாவது நீ வாங்கித் தந்திருக்கியா.. இப்போ என்ன அக்கறை? என்னைக் கொல்லப் பாக்கறியா? அடேய், பார்த்தியாடா உன் பெண்டாட்டியோட நல்ல மனசை?''

அன்றைக்கு பிரதீபா அழுத அழுகை கொஞ்ச நஞ்சமில்லை.

இப்போது நீங்களே சொல்லுங்கள். பேசப் போனது என்னவோ பாசத்தோடுதான்.. ஆனால் எப்போது, எப்படி பேச வேண்டும் என்று ஒன்றிருக்கிறது பாருங்கள்.. அதைத்தான் நீங்களும் நானும் பேசப் போகிறோம்!

முதலில் எம்.டெக்கிலேயே ஆரம்பிக்கலாமே.. அதாங்க, மாமியார் டெக்னிக்!

அனுராதா ரமணன் 2

## பேசி ஜெயிக்கலாம் வாங்க!



''என்ன.. எப்படி இருக் கீங்க?''

- இப்படி தினமும் யாராவது, யாரையாவது கேட்பது உண்டுதான். ஆனால் மாமியார், மருமகளிடையே மட்டும் இது கொளுத்திப் போட்ட பட்டாசு மாதிரி வெடிக்க ஆரம்-பித்து விடும். வார்த்தையின் 'வெயிட்' அப்படி!

''எப்படியிருக்கீங்கனு என்ன திமிரா கேக்கறா பாரு..'' - இப்படி விம்மி அழுகிற மாமியார்களும் உண்டு.

உடம்பு சரியில்லை என்கிற சாக்கில் பிறந்த வீட்டுக்குப் போய் செல்லம் கொண்டாடி விட்டு, குறைந்தது இரண்டு கிலோவாவது ஏறி வரும் மருமகளை, முகத்துக்கு முகம் நேரிடப் பார்த்து, 'இப்ப உடம்பு எப்படிம்மா இருக்கு' என்று பரிவாக கேட்க நினைத்து, சில மாமியார்கள் படு விறைப்பாகக் கேட்பார்கள்..

''உம், உடம்பு எப்படி இருக்கு?''
விசாரணையே, பேட்டை தாதா கணக்கில் இருக்க, மருமகள், புருஷனிடம் பாய்வாள்..

''என்னங்க.. உங்கம்மா, நான் வந்ததும், வராததுமா எப்படி மிரட்டறாங்க பாருங்க..''

இது போதும் கலவரம் உருவாக..

''ஏம்மா, அவளே ஆஸ்பிடல்ல இருந்து முந்தா நாள்தான் டிஸ்சார்ஜ் ஆகியிருக்கா. நீ இப்படி மிரட்-டறியே.. பாவம் அவ..''

''நான் என்னடா மிரட்டினேன்? உடம்பு எப்படி இருக்குன்னுதானே கேட்டேன்? அது மிரட்டலா?''

''இல்லே, நீ அதட்டினே..''

''இதப்பாரு.. என் குரல் அப்படி. இவளுக்காக எல்லாம் குழைய என்னால முடியாது..''

அநேகமாக இந்த சண்டையின் முடிவு தனிக் குடித்தனமாகத்தான் இருக்கும்.

இன்னும் பல வீடுகளில்.. ருசிகரமான சம்பவங்கள் எல்லாம் நடக்கும்.

உதாரணத்துக்கு, எனக்கு தூரத்து உறவு. ருக்மிணி என்று ஓர் அம்மாள்.. வயது எழுபத்து மூன்றோ என்னவோ.. ரத்தக்கொதிப்பு, பித்த வெடிப்பு, வாயு உபத்திரவம், நரம்புகள் எல்லாம் உடம்புக்குள்ளேயே ஸ்வெட்டர் மாதிரி பின்னிக் கொண்டன என்று 'மல்டிபிள் பிராப்ளம்ஸ்'க்காக கொஞ்ச நாட்கள் போல மருத்துவமனையில் இருந்துவிட்டு வந்தாள்.

அவள் மகனும் மருமகளும் பேசி வைத்துக் கொண்டு, இனிமேல் அம்மாவை ரெஸ்ட்டில் வைத்திருக்க வேண்டும் என முடிவு செய்தார்கள். எண்ணம் என்னவோ நல்ல விதமாகத்தான் இருந்தது. இதை மாமியாரிடம் சொன்னாள். என்ன, கொஞ்சம் உரிமை எடுத்துக் கொண்டு, அதட்டினாள் போலச் சொன்னாள் ('' 'போல' என்னடி 'போல'.. அதட்டினாள் என்று விளக்கமாகச் சொல்லேன்'' - இது ருக்மிணியின் வாதம்)

''இந்தாங்க, நீங்க சமைச்சதெல்லாம் போதும். பேசாமப் படுத்துக்குங்க. இனிமே, சமையலை நான் பார்த்துக்கறேன்..''

ருக்மிணி அம்மாளின் முகம், வெள்ளாவிப் பானைக் கணக்காக ஆகி விட்டது.

எத்தனை வயதானால்தான் என்ன.. ஒரு மனுஷியை, மூட்டைப் பூச்சியை நசுக்குவது போல நசுக்கக் கூடிய ஒரே வார்த்தை, ''இனி நீ சமைக்க வேண்டாம்'' என்பதுதான்!

சமையலறை என்பது ஒவ்வொரு பெண்ணுக்கும் (அவள் உத்தியோகத்துக்குப் போகிறவளாக இருந்தாலும்) ராஜாங்க சபை மாதிரி. கரண்டியும் பாத்திரங்களும் அவளது பிரத்யேக ஆயுதங்கள். ஏதோ, அவ்வப்போது சமைக்க போரடித்தால் மட்டுமே 'உடம்பு சரியில்லை' என்று கொஞ்சம் வியாதி கொண்டாடிக் கொள்வார்களே தவிர இந்த விஷயத்தில் விருப்ப ஓய்வே கிடையாது. யாரும் விரும்பவும் மாட்டார்கள்.

''எனக்கு எங்கே ரெஸ்ட்? எமன் வந்து கூப்பிட்டாலும் கூட, 'சித்த இருடாப்பா.. இந்தப் பிசாசுகளுக்கு வடிச்சுக் கொட்டிட்டு வர்றேன்'னுதான் சொல்லணும்..''

இப்படி வாயால் மேளம் கொட்டுவார்களே தவிர, மருமகள், ''நீங்க உக்காருங்க, நான் பார்த்துக்கறேன்'' என்று சொல்லி விட்டால் மாத்திரம், என்னவோ முதுகெலும்பையே உருவிப் போட்டு விட்டாற் போல, இவர்கள் 'லொடக்கு' சுந்தரிகளாகி விடுவார்கள்.

''என்னை கிச்சனுக்குள்ளயே வரக் கூடாதுன்னு சொல்லிட்டா..''

''இந்தக் கை எத்தனை சமைச்சிருக்கு? எத்தனை ஊறுகா.. எத்தனை வடாம்.. வத்தல்.. நான் வைக்கிற பருப்புருண்டை குழம்புக்கு, பெருமாளே இறங்கி வந்து, 'எனக்கு ஒரு உருண்டை'னு கேப்பார். நேத்து வரைக்கும் என் பையனுக்கு என் சமையல்தான் அமிர்தமா இருந்துச்சு. இப்ப கட்சி மாறிட்டான்..''

இத்தனை புலம்பலுக்கும் கழிவிரக்கத்துக்கும் காரணம்.. மருமகள், மாமியாரின் ஓய்வைக் கருத்தில் கொண்டு சொன்ன வார்த்தைகள்தான்.

''இப்படி எல்லாத்தையும் தப்பாகவே அர்த்தம் பண்ணிக்கிட்டா, வேற எப்படித்தான் பேசறதாம்?''

- இந்தக் கேள்வியைக் கேட்பது வெண்டைக்காய் பிஞ்சுகள் போன்ற நமது இளம் மருமகள்கள் கூட்டம்தான்.

''பேசாமலேயே இருந்து பார்த்தேன் ஆன்ட்டீ.. அதுக்கும் கோவிச்சுக்கறாங்க. எனக்கு என் மாமியார் வச்ச பேரே ஊமைக் கோட்டான், இடிச்சபுளி, கொழுக்கட்டை வாய்க்காரி இதெல்லாம்தான்..''

- ரொம்பவும் ஃபீல் பண்ணிப் புலம்புவது கும்பகோணம் புஷ்பா..

கொஞ்சம் கஷ்டம்தான். அப்படியே கழுவுகிற நீரில் நழுவுகிற மீன் மாதிரி நாசூக்காக அந்த சந்தர்ப்பத்தில் தப்பிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

பேசாமல் இருக்கவே கூடாது. நிறைய நாள் மௌனம் காத்தால், விரோதம் அதிகமாகும். மாமியாரிடம் மட்டுமல்ல.. நாத்தனார்கள், ஓரகத்திகள்.. இப்படி புகுந்த வீட்டினரிடம் பேசும் கலை இருக்கிறதே.. எந்த சாணக்கியரும் எழுதி வைக்காத சாஸ்திரம் அது!

அது பற்றியும்..




மாமியார்களாவது ஆரம்ப காலத்தில் சதிராட்டம் ஆடி விட்டு, போகப் போக 'அட்ஜஸ்ட்' ஆகி விடுவார்கள். எல்லாம் மகன் மேலும் பேரக் குழந்தைகள் மேலும் உள்ள பாசத்தினால்!

ஆனால், அடுத்த கிளைகளான நாத்தனார்களும் ஓரகத்திகளும் அப்படியில்லை. காரணம், அவர்களுக்கு விட்டுக் கொடுத்துத்தான் போக வேண்டும் என்கிற அவசியம் ஏதுமில்லை. ஒன்று, மேலே விழுந்து புரள்வார்கள். இல்லாவிட்டால், புளி ஜாடி மாதிரி கனமாய் முகத்தை வைத்துக் கொண்டிருப்பார்கள்.

ரொம்பவும் ஈஷியதெல்லாம், பின்னாளில், 'சரஸ்வதி சபதம்' பத்மினி - சாவித்திரி - தேவிகா மாதிரி, 'விம லாவா.. கமலாவா.. கோகிலாவா..' என மாமனாரைப் பாட வைத்து விடும்கள்.

சில வீடுகளில் நாத்தனாரும் அண்ணியும் இழையோ இழையென்று இழைவார்கள். பேச்சுக்குப் பேச்சு கிண்டலடிப்பதும் உண்டு. எனக்குத் தெரிந்து ஜானகி என்று ஒரு பெண்மணி. அவள் நாத்தனார் சரஸ்வதி. அவர்கள் பேசிக் கொள்வதைப் பார்த்தால், ஏதோ உயிர் சிநேகிதிகள் மாதிரி தோன்றும்.

''என் ராட்சஸி..''

''எங்க வீட்டு பூதமே..''

''போடி எலிக் குஞ்சு..''

''நான் எலிக்குஞ்சுன்னா நீ பன்னிக்குட்டி..''

இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் கிண்டலடித்துக் கொண்டு, இடியிடி எனச் சிரிப்பார்கள். சரஸ்வதி ஊரிலிருந்து வந்து விட்டால் போதும். மேலே விழுந்து புரளாத குறையாக அளவளாவி, ஒரே கலர் பட்டுப்-புடவை அணிந்து ராதா - ஜெயலட்சுமி, பாம்பே சிஸ்டர்ஸ் மாதிரி கலக்கிக் கொண்டிருப்பார்கள்.

அப்பேர்ப்பட்ட ஜோடியை ஓர் ஆவணி அவிட்டம் பண்டிகை பிரித்தது. பண்டிகை.. அதுவும் ஆவணி அவிட்டம் என்றால் லேட் சாப்பாடுதான். ஆனால், ஜானகி புருஷன் மிகச் சீக்கிரமாக ஆபீஸ் வேலையாக போக வேண்டியிருப்பதால் சட்டு புட்டென முடித்து, சாப்பாடும் ஆகி விட்டது. சரசுதான் அன்றைக்கு சமையல். அற்புதமாக சமைத்திருந்தாள். மீதமிருந்த வடைமாவை தட்டிக் கொண்டிருக்க.. நாரதர் பெண் உருவில் வந்தாற்போல, எதிர் வீட்டுக்காரி..

''ஜானு.. ஒரு கரண்டி மைதாமாவு இருந்தா கொடேன்.. இன்னும் பத்து போளிக்கு மேல் மாவு போதலை.. ஆமா, உங்க வீட்டுல சாப்பாடெல்லாம் முடிஞ்சுடுச்சு போல இருக்கே.. உனக்கென்ன, நாத்தனார் உண்டான காரியத்தை

செஞ்சிடறா..''

இதற்கு நியாயமாகப் பார்த்தால் ஜானகி, புன்சிரிப்-புடன் தலையை அசைத்திருந்தாலே போதும். அல்லது, நாத்தனாருக்குப் பாராட்டுப் பத்திரம் வாசிக்க வேண்டும் என்று தோன்றியிருந்தால் அதையாவது செய்திருக்கலாம்.

ஆனால், அதையெல்லாம் விட்டு, ஒரு வார்த்தை சொன்னாள்.

''ஆமா.. ஆவணி அவிட்டத்துக்கு அசடி கூட சமைச்சிடுவா..''

உண்மையில் இப்படியரு பழமொழியே இருக்கிறதுதான்.

'ஆவணி அவிட்டத்துக்கு அசடி கூட சமைத்து விடுவாள்..'

இந்தப் பழமொழி வரக் காரணம், இந்த விசேஷத்-தன்று சாப்பிட வெகு நேரமாகும்.. அதற்குள் ஒரு அசடாக இருந்தாலும், சமைக்கத் தெரியாத பெண்ணாக இருந்தாலும் சமாளித்து விடுவாள் என்பதுதான்.

ஆனால் அதை இவள் சொன்ன விதம், அதுவும் நாத்தனார், எண்ணெய் அடுப்பில் உட்கார்ந்து வியர்த்து வழிய வடை தட்டிக் கொண்டிருக்கும்போது சொன்னது.. பெரிய பூகம்பத்தையே கிளப்பி விட்டது!

சரஸ்வதி, கதகளி ஆட்டமே ஆடிவிட்டாள். அண்ணன் வந்ததும் வராததுமாக பொரிந்து கொட்டி விட்டாள்.

''என்னை அசடினு சொல்லிட்டாண்ணா. இத்தனைக்கும் காலையில பத்து மணிக்குள்ள சேமியா பாயசம், பச்சடி, ஆம வடை, போளி, மோர்க்குழம்பு, உருளைக்கிழங்கு பொடிமாஸ், வாழைக்கா சிப்ஸ், தக்காளி ரசம்னு இத்தனையும் செஞ்சிருக்கேன். நான் அசடா? என்னமோ அன்னிக்கு நீ, பெண்டாட்டி சாப்பாடே சாப்பிட்டு நாக்கு மரத்துப் போச்சுன்னு சொன்னியே.. அதுக்காக, சிரமம் பார்க்காம எல்லாத்தையும் இழுத்துப் போட்டுண்டு செஞ்சா, நான் அசடா?''

''என்னது? என் சமையல் சாப்பிட்டு நாக்கு மரத்துப் போச்சா? உன் அண்ணா சொன்னாரா.. எங்கே, என்னைப் பார்த்துச் சொல்லச் சொல்லு.. நான்தான், பாவம் எப்பவும், எது செஞ்சாலும் போதும் போதாமயுமாச் செஞ்சிடறேன்னு சொல்லுவியே.. இன்னிக்கு ஒரு நாள் இஷ்டம் போல மளிகை சாமானை வாரியிறைச்சுப் பண்ணிக்கட்டும்னு கிச்சனை விட்டேன். ராத்திரி இருக்கு, கிச்சனை கிளீன் பண்ற வேலை எனக்கு..''

இந்த சண்டை ஆறு வருடங்கள் போல நீடித்தது என்றால் நம்புவீர்களா.. நடுவில் ஜானகியின் பெண் கல்யாணத்துக்குக் கூட அத்தையா லட்சணமா சரஸ்வதி வரவில்லை.

''ஆமா.. இந்த அசட்டுக்கு அங்கே என்ன வேலை?''

- இப்படி சரஸ்வதி நொடித்ததாகக் கேள்வி. இது போன்ற ஒற்றை வார்த்தையால், அல்லது ஒரு வாக்கியத்தினால் கந்தலான குடும்பங்கள் எல்லாம் இருக்கின்றன.

இது இப்படியானால்.. ஓரகத்திகளுக்குள் வேறு விதமான பிரச்னை எழும். இதை நாம் 'கே' பிராப்ளம் என்று சொல்லலாம்.

''அது என்ன மேடம் கே?''

திருவொற்றியூர் ஐமுனா.. ஸாரி, ஐம்னாவாம்.. கேட்கிறாள்.

'கே' என்ற அந்த வில்லன் பற்றியும்..

**'கே'** யைத் திருப்பிப் போட்டால், அன்னியோன்யம் பொங்கி வழியும் என்றவுடன், தோசையை திருப்பிப் போடுவது போல,'' என்று அதை எழுதி, ஒண்ணாங்கிளாஸ் வாண்டுகளிடம் கூட குட்டு வாங்கிவிட்டார்களாம் பல வாசகிகள்.



எழுத்தைத் திருப்பி என்ன பண்ண..? வில்லன் போல இந்த 'கே' வந்து உட்காரும் இடத்தை மாற்ற வேண்டாமா?

அதாவது, 'எனக்'கே' புரியல்லே..'

'எனக்'கே' தெரியாது..'

இது எல்லாம்தான் சத்ரு.

இதுவே நமக்குள் இருக்கும் ஈகோவைக் கொஞ்சம் தள்ளி வைத்து விட்டு, இப்படி சொல்லிப் பாருங்கள்..

"இது என்ன ராகம்னு உங்களுக்'கே' தெரியலையா..!"

"பூசணிக்காய் ஓலன் எப்படி பண்றதுனு, திருவனந்தபுரத்துலயே பிறந்து வளர்ந்த உங்களுக்'கே' தெரியலைன்னா.. நாங்க கண்டபடி.."

ஒரே எழுத்துதான். ஆனால், எனக்'கே'யில் இருக்கிற தெனாவெட்டு உனக்'கே'யிலோ உங்களுக்'கே'யிலோ இல்லை.

"இப்படிச் சொல்லிட்டா அவ தலைக்கனம் ஒரேடியா ஏறிடுமே.. ஏற்கெனவே மண்டை வீங்கி.."

மயிலாடுதுறை காமாட்சியின் முணுமுணுப்பு இது..

எப்பேர்ப்பட்ட மண்டை வீங்கியையும் மனம் குளிரச் செய்வதுதான் நம் வேலை. உண்மையில் அந்த உங்களுக்'கே'யைப் பெற வேண்டிய தகுதி தனக்கு இருக்கிறதா இல்லையா என்பது அவர்களுக்குத் தெரியும்.

எனக்குத் தெரிந்து தர்மசம்வர்த்தினி என்று ஒரு பெண் இருக்கிறாள். ஏதோ 'நாம்கே வாஸ்தே' ஒரு டிகிரி வேண்டுமே என்பதற்காகப் படித்தாள்.

கல்யாணமாகி இப்போது பத்து வயசிலும், எட்டு வயசிலும் இரண்டு பிள்ளைகள். இந்தக் காலத்து ஐந்தாம் வகுப்புதான் அந்த நாளைய இன்ஜினீயர், டாக்டர் படித்தவர்களின் மூளையையே வெங்கல உருளியில் போட்டு, சுருளக் கிளறிய மைசூர் பாகு மாதிரி அந்தப் பாடு படுத்துகிறதே..

தர்மசம்வர்த்தினிக்கு பிள்ளைகளோடு ஈடு கொடுக்க முடியவில்லை. அவளுடைய கணவரும் நாத்தியும் 'நீ என்ன படிச்சுக் கிழிச்சே' என்பதுபோல இவளைப் பார்க்க.. சமயோசிதமாக இவள், அவர்களை முந்திக் கொண்டாள்.

"ஏய் கண்ணா.. அத்தையும் அப்பாவும் என்னை விட நிறைய படிச்சவங்கடா. அவங்ககிட்ட சந்தேகம் கேளு. அவங்களுக்'கே' புரியலையின்னா, எனக்கு எப்படி புரியப் போவுது.."

அதற்குப் பிறகு, அவளது பிள்ளையாண்டான், கணக்கு நோட்டை எடுத்துக் கொண்டு, அப்பாவிடமும் அத்தையிடமும் ஓடி விடுகிறான். இவர்கள் புருவத்தைச் சுருக்கினால், உடனே பாலகன் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு கேட்கிறான்.

"அய்யிய்யே.. உங்களுக்'கே' புரியலையா?"

தர்மசம்வர்த்தினி ஊஞ்சலில் உட்கார்ந்து, செகண்ட் டோஸ் காபியை ஆற்றி ஆற்றிக் குடித்துக் கொண்டிருக்கிறாள்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், படிக்கிற படிப்புக்கும் சமயோசிதமான புத்திக்கும் சம்பந்தமே இல்லை..

எண்பது வயசான ஓர் அம்மாள்.. பெரிய பணக்காரி. வீடு நிறைய குழந்தை, குட்டிகள்.. பிள்ளை, மருமகள்.. திடீரென ஒரு நாள்.. இந்த அம்மாளின் கணவர் அவருக்கு தொண்ணூறு வயதிருக்கும்.. காலமாகி விட்டார். பெரிய சாவு.. கல்யாணச் சாவு.. வீடு நிறைய கூட்டம். துக்கம் விசாரிக்க வருபவர்களும் போகிறவர்களுமாய்.. ஒரு மாதம்

குறையாமல் திமிலோகப்பட்டது.

மாமியார் சாப்பிட உட்கார்ந்ததும் மருமகள்தான் பரிமாறினாள். ரசம் சாதம் முடிந்து, மோர் சாதம் சாப்பிட வேண்டிய கட்டம் வந்தது. மருமகளுக்குத் தெரியும், மாமியாருக்கு கெட்டித் தயிர்தான் பிடிக்கும் என்று. ஆனாலும் இப்போது தயிர் ஊற்றலாமோ.. எத்தனை வயசானால்தான் என்ன.. துக்கம் துக்கம்தானே..

அதனால் அவள் கேட்டாள்.

"அம்மா, தயிராப் போடவா.. இல்லை கடைஞ்சு மோராப் போடவா..

"ஆமா.. அவரே போயிட்டார். இந்தக் கட்டைக்குக் கடைஞ்சென்ன வேண்டிக் கிடக்கு? எல்லாம் தயிராவே போடு.."



'சட்'டெனக் கேட்பவர்க்கு ஏதோ துக்கப்பட்டவள் விரக்தியில் பேசுவது போல இருந்தாலும், கொஞ்சம் ஊன்றி கவனித்தால், பாட்டியின் பேச்சு சாமர்த்தியம் தெரிந்து விடும்.

இது மாதிரி பேச்சினாலேயே பந்தல் போடுபவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்.. அவர்களில் பலர், பள்ளிக்கூடம் கூடத் தாண்டியதில்லை. ஆனாலும் எப்படியோ பேசி ஜெயித்து விடுவார்கள்.

அந்தக் காலத்தில் என் பாட்டியும், கறிவேப்பிலை கொத்தமல்லி, இஞ்சி இது மூன்று மட்டும் விற்பவளும் பேசுகிற பேச்சு ரொம்பவும் ரசிக்கத்தகுந்ததாக இருக்கும்.

இந்த கறிவேப்பிலைக்காரிக்கு காசெல்லாம் ஒரு பொருட்டே இல்லை. ஒரு பிடி அரிசிக்கு ஒரு கொத்து கறிவேப்பிலை, கொத்தமல்லி, இஞ்சிக்கு தனியாக இன்னொரு பிடி.

"ஒரு கொட்டைப்பாக்கு அளவு இஞ்சி போடக் கூடாதா தங்கச்சி.."

இது என் பாட்டி.

"இஞ்சியா.. மார்க்கெட்டுல போய்ப் பாரு.. தா.. என் உள்ளங்கை அளவு இஞ்சி ஒரு ரூவா விக்குது.."

"ஆங்.. உனக்கே அந்த விலையா?"

"ஏன்.. எனக்கென்னா.. கிரீடமா வச்சிருக்கு?"

"அதில்லே தங்கச்சி.. காலங்கார்த்தாலே 'பளபள'னு மஞ்ச மினுக்க, நெத்தி நிறைய குங்குமமுமா.. உன்னைப் பார்த்தாலே கண்ணு நிறைஞ்சு போகுதே.. இந்த மகாலஷ்மிகிட்ட போனி பண்றதுக்காக விலையை சித்த குறைக்க மாட்டாங்களானு கேட்டேன். சரி, போ.. எனக்கு இஞ்சி வேணாம். அரிசி எடுக்க சமையக்கட்டு வரைக்கும் நடக்கணும்.."

"இந்தா.. வச்சிக்க.."

"அட வேணாம் தங்கச்சி, பாவம் நீ.."

"இருக்கட்டும் வச்சிக்க.. இந்தக் கொட்டைப் பாக்குல நான் என்ன மாடி வூடா கட்டப்போறேன்.."

அந்த நேரத்தில் பாட்டியின் முகத்தைப் பார்க்க வேண்டும். என்னவோ லாட்டரியில் கோடி ரூபாய் அடித்தாற் போலப் பிரகாசிக்கும்.

"உனக்கு இது தேவையா?" நான் சண்டை போடுவேன்.

''இப்ப என்னங்கறே.. 'நாயே நல்லம்மா.. பேயே பெரியம்மா'னு பேசித்தான் ஜெயிக்க முடியும். இந்தக் கொட்டைப் பாக்கு இஞ்சி எனக்கு லாபம்னா, காலை நேரத்துல அவளோட மாரியாத்தா முகத்துக்கு ஒரு துதி பாடினேனே.. அது அவளுக்கு லாபம். அவ இன்னிக்கு முழுக்க, 'கற்பகம்' கே.ஆர்.விஜயா கணக்கா சிரிச்சிட்டே நடப்பா பாரு..''

பாட்டி சொல்வது போன்ற முகஸ்துதி தேவைதான். ஆனால், இதில் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். 'ஓவர் டோஸ்' ஆகி விடக் கூடாது. அதுபற்றியும்..

பேசுவோம்..



புகழ்ச்சிக்கு மயங்காதவர்கள் கிடையாதுதான். ஆனால், அதுவே ஓவர் டோஸ் ஆகி விடக் கூடாது. அதிலும் உண்மை-யான சரக்கு என்ன வென்று தெரி-யாமல் டூமச் ஆக ஃபீல் பண்ணி விடக் கூடாது.

என் சிநேகிதியின் ஒன்றுவிட்ட நாத்தனார் சந்திரமதி, மணத்தக்காளி வற்றல் குழம்பு பண்ணினால் ஊரே மணக்கும். இத்தனைக்கும், ஒரு ஆழாக்கு அளவே கொள்ளும்படியாக கற்சட்டி ஒன்றை வைத்திருக்கிறாள். அவளுக்கு, அவள் பாட்டி தந்ததாம். அதில்தான் வற்றல் குழம்பு வைப்பாள். என்ன.. புருஷன், பெண்டாட்டிக்குப் போக, மீதி அரைக் கரண்டி இருந்தால் அதிசயம்.

அந்த அரைக் கரண்டியை டேஸ்ட் பார்த்த என் சிநேகிதி உட்பட பலரும் 'சந்திரா.. சந்திரா' என்று உருகுவோம். எங்களில் ஒருத்தி உணர்ச்சி வசப்பட்டு, சந்திரமதியின் இரு கைகளையும் பற்றி, கண்களில் ஒற்றிக் கொண்டு கரகரவென அழுதாள். நாங்கள் கூட குழம்பு பட்ட கையை ஒற்றிக் கொண்டதால் காரம் கண்களில் பட்டு எரிச்சலில் அழுகிறாளோ என்று நினைத்தோம். அதெல்லாம் இல்லை. நிஜமாகவே இப்பேர்ப்பட்ட குழம்பை ருசி பார்க்கக் கொடுத்த நண்பியின் மீது நன்றிப் பெருக்கெடுத்து விட்டது.

இதற்காகவே - அதாவது, எங்களுக்காகவே வற்றல் குழம்பு வைத்து எங்களை சாப்பிட அழைத்திருந்தாள். அதே கற்சட்டி.. அதே சுவை.. அதே மணம்.

ஆனால், நாங்கள் ஏழெட்டு பேர் போனதால், காலை ஏழு மணி முதல் பதினொரு மணி வரைக்கும் அத்துணுண்டு கற்சட்டியில் ஐந்தாறு தரம் குழம்பு வைத்திருக்கிறாள் மகராசி.

அந்தக் குழம்புக்கும் சுட்ட அப்பளத்துக்கும் மயங்கியவள் (ஏற்கெனவே அழுதவள்தான்) இவளுக்கு 'இரண்டாம் மெனு ராணி செல்லம்' என்கிற பட்டப் பெயரைக் கூட அங்கேயே, அந்தக் கணமே - ரசம் சாதம் சாப்பிடுவதற்குள் அளித்து விட்டாள்.

ரசம் வந்தது. வெறும் புளித் தண்ணீர். அவரைக்காய் பொரியலில் நார்தான் நிறைய! மோரில் ஒரேயடியாக கங்கா, பாகீரதி, நர்மதா, சிந்து, காவேரி என பஞ்ச நதிகளும் சங்கமித்திருந்தன.

பட்டம் வழங்கியவள், ஈரக் கண்களைப் புறங்கையால் துடைத்துக் கொண்டே, கடைசி வாய்க்கு ஒரு ஸ்பூன் குழம்பை, உள்ளங்கையில் ஏந்தி குடித்து விட்டு நகர்ந்தாள்.

எதற்குச் சொல்கிறேன் என்னால், வெறும் வற்றல் குழம்பை வைத்து 'ஆஹா.. ஓஹோ'வெனப் புகழ்ந்து விட்டால், நிஜமான கிச்சன் கில்லாடிகளை நாம் மட்டம் தட்டியவர்களாவோம்.

புகழ்வதற்கும் ஒரு அளவு வைத்துக் கொள்ள வேண்டும். ஓரளவுக்கு உண்மையும் இருக்க வேண்டும். ஒன்றுமில்லாததை ஒரேயடியாக 'பில்ட் அப்' செய்து விடவும் கூடாது. அதிலும், எதிராளி புத்திசாலியாக இருந்தால் அவ்வளவுதான்.. 'கிழிஞ்சது கிருஷ்ணகிரி' என்றாகி விடும் நம் கதை..

ஒரு ரகசியம் உங்களிடம் சொல்லட்டுமா..

மாமியார்கள் எல்லாருமே சிங்கம், புலி, கரடி இல்லை. நாத்தனார்கள் அனைவருமே நரி, முதலை, கோட்டான்கள் இல்லை என் பிரியமான தோழிகளே..

என்ன, மேலுக்குக் கொஞ்சம் கரடுமுரடாகத் தோற்றமளிப்பார்கள் சிலர். இன்னும் பலர் சுபாவத்தில் நல்லவர்களாகத்தான் இருப்பார்கள். ஆனால், பிள்ளையின் திருமணத்தின்போதே இவர்களது அத்தங்கா, அம்மங்கா, ஒன்றுவிட்ட அக்கா, ரெண்டுவிட்ட ஓரகத்தி.. இப்படி எவளாவது மாப்பிள்ளையின் அம்மா காதில், தங்களுக்குத் தெரிந்ததை எல்லாம் ஓதி விட்டுப் போவார்கள்.

''இந்தா, உனக்கு சமர்த்தே போறாது. நீயே குழந்தை.. இப்ப உன் பிள்ளைக்கு ஒரு கல்யாணமாகி நீயும் மாமியாராயிட்டே.. பொண்ணோட அம்மா பலே கைகாரியா இருப்பா போல இருக்கு.. போற போக்கைப் பார்த்தா, மாப்பிள்ளையை கைக்குள்ள போட்டுட்டாலும் ஆச்சர்யமில்ல. நீதான் லகானை இழுத்துப் பிடிக்கணும்.''

''கண்டிப்பும் கறாரும் முகத்துலயே தெரியணும். ஹூம்.. உனக்கெங்கே அதெல்லாம் வரப் போறது..''

''இப்ப ஏமாந்துட்டேனு வச்சுக்க.. அப்புறம் 'ஐயோ'னாலும் வராது.. 'அம்மா'னாலும் வராது..''

இதுபோன்ற போதனைகளால் முகத்தைப் புளி ஜாடி மாதிரி வைத்துக் கொள்பவர்களே பலர்.

உண்மையில் இது போன்ற மாமியார்-களுக்கு மருமகள்-களிடம் உள்ளுக்குள் பயம்.. எங்கே கொஞ்சம் ஏமாந்தால், தலை மேல் ஏறி உட்கார்ந்து விடுவோளோ என்கிற பீதி! இவர்கள் எப்போதுமே விழிப்பு உணர்வுடன் இருப்பதால், ஐஸ் வைப்பது.. சும்மானாச்சும் சொறிந்து விடுவது.. அல்வா கொடுப்பது.. இதெல்லாம் அத்தனை சுலபத்-தில் நடக்காது. இதனாலேயே சாதாரண பேச்செல்லாம் கூட இடக்கு மடக்காகவே வந்து விழும்.

''அத்தை, நான் குளிச்சிட்டு வந்துடட்-டுமா?''

''என்ன புதுசா கேள்வி?''

''இல்லே.. நீங்க ஏதோ கோயிலுக்குப் போகணும்னு சொல்லிட்-டிருந்தீங்களே.. அதான்.. நான் அப்புறமா குளிக்கிறேன்.''

''போகணும்னு சொன்னேன். ஆனால், போகலை. நினைக்கற-தெல்லாம் நடக்கறதா என்ன.. வீட்டுல விழுந்து கிடக்கறவளுக்கு என்ன அவசரம்.. எந்த ரயிலைப் பிடிக்கப் போறேன்? எந்த ஆபீஸுக்குப் போறது தட்டு கெட்டுப் போறது? ஒவ்வொருத்தரைப் போல நான் எதுக்காவது ஆத்திரப் பட்டிருக்கேனா.. அவசரப் பட்டிருக்கேனா? எல்லாரும் குளிச்சு, தெளிச்சு, ஆக வேண்டியதைப் பாருங்க. வீட்டோட கிடக்கற கிழம்தானே நான்? எப்பக் குளிச்சா என்ன..''

ஒரு கேள்விக்குப் பக்கம் பக்கமாக பதில். இது எல்லாமே, 'இந்தாம்மே.. நீ எத்தினிதான் 'ஆக்ட்டு' கொடுத்தாலும், எங்கிட்ட உன் பருப்பு வேகாது' என்கிற கதைதான். இது போன்றவர்களிடம் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே நாம் திறமை காட்ட வேண்டும்.

இன்னும் சில மாமியார்கள், தங்களுக்கு என்ன தேவை, எது வேண்டும் என்றே சொல்ல மாட்டார்கள். ஆனால், மனசுக்குள் திட்டம் போட்டு அமுக்கமாக வைத்திருப்பார்கள்.

மருமகள் என்ன.. மகன், கணவர் - இப்படி யார் எதை எடுத்துச் சொன்னாலும் அடமாக முகத்தை தர்பூசணி கணக்காக வைத்திருப்பார்கள்.

நாமாவது பேசி ஜெயிக்கப் பார்க்கி றோம். அவர்கள் பேசாமலேயே, நம் எல்லாரையும் மண்ணைக் கவ்வ வைத்து விடுகிற பலே பெண்மணி-கள்.

இவர்களை வழிக்குக் கொண்டு வருவதும் சாதாரண விஷயமில்லை.

வாருங்கள், அது பற்றியும்..

மாமியார்கள் பல விதம்.. ஒவ்வொருவரும் ஒரு விதம்.. அதில் ஒன்றுதான் 'யார் மனசுல யார்?' என்கிற டைப்..

அநேகமாக எல்லார் வீட்டிலும் இருக்கிற வகைதான் இந்த மாமியார். தனக்கு இன்னது வேண்டும் என்று வாய் விட்டுச் சொல்ல மாட்டார்கள். 'சரி.. சிறுசுகள் எப்படியோ சமைத்துப் போடட்டும்' என்றும் விட மாட்டார்கள். தான் நினைக்கிறதைச் சாதித்து விட்டே நிமிர்ந்து உட்காருவார்கள்.




ஆண்டாளம்மாவுக்கு செலுலாய்ட் பொம்மை மாதிரி இரண்டு மருமகள்கள்; நான்கு பேரக் குழந்தைகள். வயது எழுபதுக்கும் மேலாகிறது. ஆனால், சமையலறை ராணி அவள்தான். கேட்டால், 'பாவம்.. குழந்தைகள் எதுக்கு சிரமப்படணும்..' என்று தேனொழுகப் பேசுவாள். ஆனால், காரணம் அதுவல்ல.. மருமகள்கள், தன் வாய்க்கு வக்கணையாக சமைத்துப் போட மாட்டார்கள் என்கிற நினைப்புத்-தான்..

கிழவிக்கு, எதெல்லாம் ஆகாது என்று டாக்டர் சொல்லியிருக்கி-றாரோ.. அதெல்லாம்தான் பிடிக்கும். அதிலும் முக்கியமாக சேப்பங்கிழங்கு, உருளைக்கிழங்கு, வாழைக்காய்.. தினசரி மெனுவில் அவசியம் அவளுக்கு. 'சிறுசுகள், 'டயட் டயட்' என்று எப்போதும் இஞ்ச் டேப்பும் கையுமாக அலைகிறார்கள்.. சமையலுக்கு எண்ணெயை இங்க் ஃபில்லரால்தான் விடுகிறார்கள்..' - அவளால் இந்த அநியாயத்தை எல்லாம் தாங்க முடியாது.

ஆதலால், காலையில் மார்க்கெட்டுக்கு எந்த மருமகள் கிளம்புகிறாளோ.. அவளிடம் ஆரம்பித்து விடுவாள்..

''யார் மார்க்கெட்டுக்குப் போறது?''

''ஏன்.. நான்தான்..''

''மாட்டுக்குப் போடறப்பல வண்டி கீரை கட்டை வாங்கிட்டு வந்து போடாதே. நேத்து பெய்ஞ்ச மழையில கீரை கறுப்பா இருக்கும்.''

''சரி.. வேற என்ன.. சௌ சௌ?''

''அதை குழந்தைகள் சீந்தாது..''

''வேற.. கத்திரிக்கா?''

''சின்னவளுக்கு தலையில இருந்த சிரங்கு இப்பத்தான் ஆறிட்டு வர்றது. கத்திரிக்கா மறுபடியும் கிளறி விட்டுடாதோ..?''

''அவரை..''

''அவரைக்காய, நான் காசிக்குப் போனப்ப, ஏதாவது ஒரு காய விடணும்னு சொன்னப்ப விட்டுட்டேன்..''

''வேற என்னதான்..''

''அரை கிலோ சேப்பங்கிழங்கு இருக்கு. இன்னும் ஒரு கிலோ வாங்கு. ரோஸ்ட் பண்ணினா ஏதோ அந்த சாக்குல குழந்தைகளுக்கு நாலு கவளம் சோறு இறங்கும்.''

''ஆனா.. உங்களுக்கு ஆகாதே..''

''ஆமா போ.. நான் ஒரு கணக்குல சேர்த்தியா.. ஏதோ கிடைக்கிறதைத் தின்னுட்டு விழுந்து கிடக்கறதை விட்டுட்டு..'' - இப்படிச் சொல்லுவாளே தவிர முக்கால் கிலோ சேப்பங்கிழங்கு ஆண்டாளம்மாவுக்குத்தான்.

இது 'டெலிகேட்'டான மேட்டராதலால் யாருமே இந்த விஷயத்தின் பக்கம் போவதில்லை. என்றைக்காவது அவள் பையன்களில் எவனாவது அக்கறையில் கேட்டாலும்.. குதி குதியெனக் குதிப்பாள் அவள்.

''ஏம்மா, உனக்குதான் கிழங்கு, எண்ணெய்லாம் ஆகாதுல.. உன் மருமகளுங்கதான் தினமும் மார்க்கெட் போறாங்களே.. ஃப்ரெஷ்ஷா, பச்சைக் காய்கறி வாங்கிட்டு வரச் சொல்ல வேண்டியதுதானே..''

''ஏண்டா.. அதை வாங்கு, இதை வாங்குனு ஆர்டர் பண்ணிட்டு அவஸ்தைப்படணுமா நான்? சௌ சௌ நீயே சாப்பிட மாட்டே.. உன் சின்னப் பொண்ணுக்கு கத்திரிக்கா ஆகாது. வெண்டக்கா இந்தக் குடும்பத்துக்கு ரெண்டு கிலோ வாங்கினாலும் வதக்கினா இத்து-னுண்டா போயிடும். எனக்கு கிழங்கு ஆகாட்டி என்ன.. நீங்க எல்லாரும் சாப்பிட்டுப் போங்க.

இன்னிக்கு இத்தனை சேப்பங்கிழங்கு ரோஸ்ட் பண்ணினேனே.. ஒரு துண்டு எடுத்து வாயில போட்டுண்டேனா.. உன் பெண்டாட்டியையே கேளேன்..'' - கிழவி மருமகளையும் இக்கட்டில் மாட்டி விடுவாள்.

பார்த்தார்கள் இரண்டு மருமகள்களும்.. வித விதமாக யோசித்தார்கள். கிழங்குக்கு கல்தா கொடுக்க வேண்டும்.. கிழவிக்கு காய்கறியை சமைக்க ஆசை வர வேண்டும். எப்படி? இது போன்றவர்களை நாசூக்காகத்தான் திசை திருப்ப முடியும்.

ஆண்டாளம்மாளின் கணவர் உயிரோடு இருந்தபோது தினமும் பச்சை காய்கறி, கீரை வகை களைத்தான் சமைக்க வேண்டும் என்று வற்புறுத்து வாராம். தனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ.. 'மணாளனே மங்கையின் பாக்கியம்' என்று ஆண்டாளம்மாள் சமைத்துப் போடுவாளாம். மாமி யாரின் வாழ்க்கைக் குறிப்பிலிருந்து இதை எடுத்துக் கொண்டார்கள் மருமகள்கள்..

''அத்தை.. மாமா இருக்குறப்ப நீங்க ஒரு பூசணிக்கா கூட்டு செய்வீங்களாமே.. மாமா அந்தக் கூட்டுக்காகவே தங்க வளையல் செஞ்சு போடணும்னு சொல்லுவாராமே..''

''கூட்டு நல்லாயிருக்குனுதான் சொல்லுவாரு. தங்க வளையல் பத்தியெல்லாம் சொன்னதில்ல..''

''உங்ககிட்ட சொல்லலையா இருக்கும். உங்க பையன் சொல்றாரே.. 'அந்தக் கூட்டு மாதிரி வரவே வராதுடீ.. இத்தனைக்கும் தேங்கா கூட அரைச்சு விட மாட்டாங்க அம்மா.. வீட்டுக்குள்ளே நுழையறப்பவே வாசனை ஆளைத் தூக்கும். அதெல்லாம் அப்பாவோட போச்சு.. அம்மா, அப்புறம் அது மாதிரி சமைக்கறதே இல்லை'னு.. ரொம்ப வருத்தப்பட்டாரு..''

''யாரு.. சின்னவனா?''

''ரெண்டு பேருமேதான். அதான் நானும் அக்காவும் என்ன சொன்னோம்னா.. 'அத்தை பாவம், வயசாயிடுச்சு.. முடியலே.. அவங்ககிட்ட அளவு, பக்குவமெல்லாம் கேட்டு.. பூசணிக்கா கூட்டு.. அப்புறம் கீரைத்தண்டு சாம்பார்.. முட்டைகோஸை மல்லிப்பூ மாதிரி பொரியல் பண்ணுவீங்களாமே.. அதையெல்லாம் கத்துக்கிட்டு செஞ்சு போடறோம்'னு..''

அவ்வளவுதான்.. ஆண்டாளம்மா ஃப்ளாட்! இப்போதெல்லாம் மார்க்கெட்டில் பை நிறையும் காய்கறிகளுடன் ஆண்டாள் உலாவுவதாக தகவல்!

அது சரி.. ஆண்டாளுக்கு இந்த வழி.. இன்னும் சில இடக்கு மடக்குகளிடமும்.. நச்சு பிச்சு உறவுகளிடமும் பேசி ஜெயிப்பது எப்படி? அது பற்றியும்..

கோதாவரி வி.பி-யைத் தெரியுமா உங்களுக்கு? சிதம்பரத்தில் இருக்கும் என் உறவுப் பெண்ணின் புக்ககத்து அத்தை. '' 'கோதாவரி'ங்கறது அவங்க பேரு. 'வி.பி'ங்கறது அவங்க படிச்ச வாங்கின பட்டமா?''னு யாரும் கேட்கக் கூடாது. அறுபதுவயசு கோதாவரிக்கு உடம்பின் நடுபாகம் மட்டும் பலூன் மாதிரி பெருத்திருக்கும். தலையும் கால்களும் சம்பந்தமே இல்லாமல் சிறுத்திருக்கும், அந்த நாளைய கோதாவரி வெங்கலப் பானையைப் போல! 'வெங்கலப் பானை' என்பதன் சுருக்கம்தான் வி.பி. (V.P.) தனக்கு இப் படி ஒரு காரணப் பெயர்இருப்பது கோதாவரிக்கும் தெரியும். ஆனால், அதையெல்லாம் பொருட்படுத்துகிற ரகமில்லை அவள்.



சுவாமி தரிசனத்துக்காக அவள் சிதம்பரம் வருகிறாள் என்றால், வெல வெலத்துப் போய்விடுவாள் திருபுரம். விழிகள் இரண்டும் ஒரு தினுசாக மாறி திருதிரு சுந்தரியாகி விடுவாள். வந்து இறங்கும்போதே இப்படித்தான் ஆரம்பிப்பாள்..

''என்னடி திருபுரம்.. போன தடவை பார்த்ததுக்கு இப்ப எங்க அண்ணாவுக்கு கன்னம் ஒட்டி, தலையில பஞ்சு பறக் கிறது. உன் மாமியார் - அதான் என் அண்ணி.. என்னவோ கவுத்துப் போட்ட பல்லி மாதிரி வெள்ள வெளுக்கக் கிடக்கா.. அத்தனையும் ரத்த சோகை. ராத்திரி ஒரு டம்ளர் பால் கொடுக்க வேண்டியதுதானே..''

திருபுரத்துக்கு வார்த்தையே வராமல் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொள்ளும். இதற்குள் அவளுடைய மாமனாருக்கும் மாமியாருக்கும் கண்களில் நீர், குளம் கட்டும்.

''என்ன இருந்தாலும் கோதாவரி கோதாவரிதான். அந்த ரத்த பாசம் விடுதா பார்.. எப்படி, மணியடிச்ச மாதிரி கேக்கறா..''

மாமனார், மனைவியிடம் தன் தங்கையைப் பற்றி சிலாகித்து விட்டு, நாதழுதழுக்கச் சொல்லுவார்..

''கோதா.. நீ பெரிய இடத்துல வாழ்க்கைப்பட்டவ. உன் குழந்தைகள் உன்னைத் தாங்கறாங்க.. இங்கே பாசு வருமானத்துல குழந்தைகளுக்கு பாலைக் கொடுத்தாலே தயிருல தண்ணிய விட வேண்டியிருக்கு. எங்களுக்கு என்ன.. காடு வா வாங்குது.. வீடு போ போங்குது.''

அவ்வளவுதான்.. ஊசியளவுக்கு இடம் கிடைத்தாலும், கோதாவரி புகுந்து விளையாடி விடுவாள்.

''என்ன அண்ணா அப்படி சொல்றே? வீடு போ போங்குதா.. யார் சொல்லிட்டாங்க அப்படி..? இந்தக் குடும்பத்துக்காக நீயும் அண்ணியும் எத்தனை உழைச்சிருக்கீங்க.. நீ மறைச்சாலும் எனக்கு தெரியாதா? உங்க ரெண்டு பேருக்கும் ஆளுக்கு ஒரு டம்ளர் பால் தர வசதி இல்லாம போயிடுச்சா இந்த வீட்டுல? பேசாம ரெண்டு பேரும் எங்கூட கிளம்புங்க. வீட்டுல நாலு எருமை, ரெண்டு பசு இருக்கு. வாரத்துக்கு ஒரு தடவை திரட்டுப்பால் காய்ச்சறேன்.''

கோதாவரியின் விஜயத்துக்கு முதல் நாள் வரை திருபுரத்தின் மாமியாரும் மாமனாரும் சந்தோஷமாகத்தான் இருந்திருப்பார்கள். பால் குடிக்க வேண்டும் என்கிற எண்ணமே இருந்திருக்காது. அது மட்டுமில்லை.. மாமனார் கிழவருக்கு பாலை கிட்ட கொண்டு வந்தாலே எட்டு ஓக்காளம் வரும். தங்கைக்காரி, தான் வந்து விட்டுப் போகும்போது இப்படி எதையாவது கிளப்பி விட்டுப் போவாள். அது மட்டுமில்லை. அடுத்தவர் வீட்டு விஷயம் என்றால் அல்வா சாப்பிடுவது மாதிரி. வாயைக் கிண்டிக் கிளறி ஒவ்வொன்றாக பிடுங்கி விடுவாள்.

''ஏம்மா திருபுரம்.. உன் மாமியார் பார்க்கத்தான் இந்தப் பூனையும் பால் குடிக்குமாங்கற மாதிரி இருப்பாளே தவிர, லங்கா ராட்சஸி! அவ ஏதாவது உன்னை அதட்டி மிரட்டி வச்சிருந்தாலும் சொல்லிடு. இந்த கோதாவரி லேசுப்பட்டவ இல்லே. நல்லவளுக்கு நல்லவ.. பொல்லாதவளுக்கு பொல்லாதவ..''

''அய்யய்யோ.. அப்படி எதுவும் இல்லே அத்தை.''

''இல்லேயின்னாலும் எனக்குத் தெரியாதா? ஆமா.. குளிச்சிட்டிருக்கியா?''

''உம்..''

''பெரியவனுக்கு அஞ்சாறதா.. சின்னவளுக்கு மூணு.. என் பேரனும் அவளும் ஒரே வருஷம். மாசம்தான் வித்தியாசம். அப்படிப் பார்க்கப் போனா, மூணாவதா ஒண்ணு ஒரு வயசுல இருக்கணுமே.. அபார்ட் பண்ணிட்டியோ?''

''சேச்சே..''

''அப்ப? ஃபேமிலி பிளானிங் பண்ணிட்டாச்சா? நீ பண்ணிட்டியா.. இல்லே அவனா.?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே அத்தை. நாங்களே போதும்னு நிறுத்திட்டோம். ரெண்டை வளர்த்தா போதாதா..''

''அப்படியின்னா.. புரியலையேடியம்மா.. அது எப்படி போதும்னு நிறுத்த முடியும்? அகமுடையான், பெண்டாட்டி ஒரே அறையிலதானே படுக்கை? அப்படி என்னைப் பார்க்காதேடியம்மா.. அக்கறையினாலதானே கேக்கறேன்.

நீ ஒண்ணு செய். பேசாம உன் புருஷனையும் அழைச்சிட்டு என் வீட்டுக்கு வா. மூணு கிரவுண்டுல ஆறு பெட்ரூமோட கட்டிப் போட்டிருக்கேன். ஒரு மாசம் வந்து தங்குங்க..''

இவள் இது மாதிரி பேசி விட்டுப் போனதுமே, மாமியார்க்காரி கைப்பிள்ளையை பிரசவ வார்டிலேயே தொலைத்து விட்ட மாதிரி பதைபதைத்துப் போவாள். மருமகளிடம் ஜாடையாகக் கேட்கவும் செய்வாள்.

''அவ ஏதாவது சொன்னாளா என்ன?''

''எவ?''

''அதான் அந்த கோதாவரி.. வெங்கலப் பானை..''

''ஒண்ணும் சொல்லலையே..''

''இல்ல.. வாசல்லயும் கொல்லையிலயும் வந்து வந்து உன் காதைக் கடிச்சிட்டிருந்தாளே.. அதான் கேட்டேன். அடுத்தவங்க வாயைக் கிண்டறதே வேலை.. நீ வாய் கொடுத்து மாட்டிக்காதே..''

ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை மெனக்கெட்டு வந்து, ஒரு குங்குமச் சிமிழ் டப்பாவில் திரட்டுப் பாலை எடுத்து வந்து எல்லோருக்கும் உபசாரம் பண்ணி விட்டு, பத்து பதினைந்து நாட்கள் தங்கி எல்லோருடைய வாயையையும் கிண்டுகிற கோதாவரியின் வாயையும் அடைக்க வழி கிடைத்தது திருபுரத்துக்கு!

ஆடுகிற மாட்டை ஆடி கறக்கிற மாதிரி, பேசுகிறவரை பேசியேதான் மடக்க வேண்டும். அதற்கு முன் அவரைப் பற்றிய சில பல விஷயங்கள்.. அதாவது அவர் மண்ணைக் கவ்விய நிகழ்ச்சிகளோ அல்லது அவர்கள் நொந்து நூடுல்ஸ் ஆன சமாசாரங்களோ.. ரொம்ப வேண்டாம்.. ஒன்றிரண்டு தெரிந்திருந்தாலே போதும். அப்புறம் அவர்களை அடக்கி, சோப்பு டப்பாவுக்குள் போட்டு மூடி விடலாம்.

திருபுரம் அப்படித்தான் அடக்கினாள். என்ன செய்தாள்? எப்படி ஜெயித்தாள்?

இந்த கோதாவரி வி.பி இருக்கிறாளே.. அதான்.. 'மருமகள், உங்களுக்கு ஒரு தம்ளர் பால் கூடத் தருவதில்லையா' என்று மாமனாரிடமும், 'ஏண்டி, உன் மாமியார் உன்னை படுக்கையறைக்குள்ளேயே விடறதில்லையா' என்று நம் பரிதாபத்துக்குரிய திருபுரத்திடமும் சொல்லிக் கொண்டு அலைகிறாளே.. (வி.பி-னா என்னனு தெரியாதவங்களுக்கு.. 'வெங்கலப் பானை'ங்கற 'செல்ல'ப் பேரோட சுருக்கம்) இந்த மனுஷியின் ஃப்ளாஷ்பேக் கொஞ்சம் கிடைத்தது திருபுரத்துக்கு.




அதாகப்பட்டது, இந்த கோதாவரி வி.பி-யின் அரட்டல் உருட்டல் சகிக்க முடியாமல், திருவாளர் கோதாவரி, இவளை, 'காசுமாலையையும் கல் அட்டிகையையும் கட்டிக் கொண்டு அழு' என்று சொல்லிவிட்டு, 'திடுக்'கென ஒரு நாள் வீட்டை விட்டுப் புறப்பட்டுப் போய் விட்டாராம். விஷயம் வெளியில் தெரிந்தால் பேச்சுக்கு இடமாகி விடும் என்று கோதாவரியின் புகுந்த வீட்டினர் மறைத்தது மட்டுமின்றி, சுமார் இரண்டு வருடங்கள் போல இந்தியாவையே சல்லடை போட்டுச் சலித்தார்களாம்.

கடைசியில் மனிதர் இமயமலையில் தாடியும் மீசையுமாக சாமியாராக அலைந்து கொண்டிருந்தாராம். 'கோதாவரி' என்கிற நதியின் பெயரைக்கூட உச்சரிக்க பயந்து ஓடி ஒளிந்தவரை, பத்து பேராய்க் கட்டி இழுத்து வந்து, பழையபடி வெள்ளை வேட்டி சட்டை மாட்டி..

இடைப்பட்ட காலம் முழுக்க, தன் கணவர் மேல் படிப்புக்காக இங்கிலாந்து போயிருப்பதாக, தன் அண்ணன் குடும்பத்தினருக்கே காது குத்திக் கொண்டிருந்த கோதாவரி வி.பி, விஷ-யத்தை ஒரே அமுக்காக அமுக்கி விட்டா-ளாம்.

இப்போதுகூட மனிதருக்குப் பழைய காவி ஞாபகம் வந்து விடக் கூடாது என்று ஆரஞ்சு பழ ஜூஸைக் கூட வீட்டில் அண்ட விடுவதில்லையாம்.

இத்தனை கெடுபிடியாக இருந்தும், இது பற்றித் திருபுரத்துக்குத் தெரிந்தது எப்படி என்கிறீர்களா? அதுதான் விதி என்பது!

திருபுரத்தின் குடும்பத்துக்கு கோதாவரி வி.பி ஒரு சத்ரு என் றால், கோதா குடும்பத்துக்கும் ஒருத்தி இருப்பாள் இல்லையா.. கோதாவின் கணவருடைய அத்தை பெண்தான் அந்த சத்ரு.

சென்னையில் நடந்த ஒரு திருமணத்தில் இந்த அத்தை பெண், திருபுரத்திடம் தலை வாரிக் கொள்ள சீப்பு இரவல் வாங்கியவள், சீப்பைத் திருப்பிக் கொடுத்தபோது வாரி வழங்கிய செய்திதான் மேற்கண்டது!

''உங்களுக்கு சிதம்பரமா.. எங்க மாமா பையனுக்கு அங்கேயிருந்துதான் பொண்ணு எடுத்தது.. தப்பா நினைக்காதே.. கோதாவரி வி.பி-னு பேரு.. தாடகை, சூர்ப்பனகை, லங்கிணி, இடும்பி எல்லாரையும் சேர்த்து உரல்ல போட்டு இடிச்சு, ஒரு உருண்டையாப் பிடிச்சாப்பல இருப்பா..''

இப்படி துவங்கியது.. பிறகு, திருபுரமும் திருவாளர் கோதாவரியின் உறவுக்காரப் பெண்ணும் ஒன்றாகவே பந்தியில் உட்கார்ந்து சாப்பிட்டு, இவள் சீப்பில் அவள் தலை வாரி, சத்திரத்தின் அழுக்கு ஜமுக்காளத்தில் படுத்து, விடிய விடிய கதை பேசி..

திருமணம் முடிந்து ஊருக்குக் கிளம்பிய திருபுரம், டி.வி விளம்பரத்தில் ஹார்லிக்ஸ் குடித்த சிறுவன் தெம்பாகச் சிரிப்பானே - அது மாதிரிதான் போனாள்.

''நாளைக்கு கோதாவரி வி.பி வர்றாளாம். போன் செஞ்சா..'' - இப்படிச் சொன்ன மாமியாரை, 'ஏதும் அறியாச் சிறுமியே.. நானிருக்க கவலை ஏன்?' என்பதுபோலப் பார்த்துச் சிரித்தாள்.

வந்தாள் கோதாவரி வி.பி.. காபியை ஆற்றி ஆற்றிக் குடித்துக் கொண்டே, ''காபியில புளியங்-கொட்டை வாசனை வருதே..'' - இப்படி ஆரம்பித்தவளை..

''ஆமா.. உங்க வீட்டுக்காரரோட அத்தை பொண்ணு மதுரையில இருக்காளோ..'' - இப்படி திருபுரம் மடக்க.. கோதா வாயில் விட்ட காபி கடைவாயில் வழிவதுகூடத் தெரியாமல், திருபுரத்தை மலங்க மலங்-கப் பார்த்தாள்.

''யாரு..? அப்பிடி யாரும் இல்லையே..''

''போங்க.. நான் ஒரு கல்யாணத்துல பார்த்தேனே.. அந்தம்மா பேரு கூட என்னமோவாச்சே..''

''சொர்ணமா..''

''அட, அதேதான். தெரியாதுன்னீங்க?''

''சொல்லிக் கேள்வி. நான் பார்த்தில்ல. மகா ராங்கி. தலைக்கனம். தனக்குத்தான் எல்லாம் தெரியும்னு.. அது மட்டுமில்ல. கொஞ்சம் சிவப்புத் தோலு வேற..''

''பார்த்ததேயில்லையினு சொன்னீங்க?''

''பார்த்ததில்ல. என் மாமியார் சொல்லக் கேள்வி.. பேசினா விட மாட்டாளே.. என்ன சொன்னா..?''

''ரொம்ப நல்ல மாதிரியா தெரிஞ்சாங்க.. ரெண்டு நாள் கல்யாணத்துலயும் நாங்க சேர்ந்தேதான் இருந்தோம். மதுரை வந்தா, வீட்டுக்கு வரச் சொல்லி ரொம்பவும் சொன்னாங்க. நானும் சிதம்பரம் வந்தா வீட்டுக்கு வரச் சொல்லி..''

''கூப்பிட்டியாக்கும்?''

''பின்னே கூப்பிட வேணாமா.. அதானே மரியாதை? தன்னோட பால்ய கதையெல்லாம் சொன்னாங்க.''

இதற்குப் பிறகு கோதாவரி, திருபுரத்திடமோ மற்றவர்களிடமோ போய் பிரச்னையை ஊதி, பெரிதுபடுத்தினாள் என்கிற பேச்சுக்கே இடமில்லை. எங்கே..? திருபுரம் அவளிடம் பேச வந்தாலே, எழுந்து போய்க் கூடத்தில் உட்காருகிறாள் கோதா. முற்றத்துக்குப் போய் கோதா நின்றால், அங்கேயும் வந்து விடுகிறாள் திருபுரம்., ''அந்த சொர்ணம் இருக்காங்களே.. உங்க வீட்டுக்-காரரை ரொம்பப் புகழ்ந்தாங்க'' என்கிறாள்.

இப்படி சுற்றி வளைத்துப் பேசுகிறாளே தவிர மெயின் மேட்டருக்கு வர மாட்டேன் என்கிறாள். 'இரண்டு நாள் முழுக்கப் பேசியிருக்கிறாளாமே.. என்ன பேசியிருப்பாள்? இந்த மனுஷர் மிரண்டு ஓடினதைச் சொல்லி இருப்பாளோ.. இவ பார்வையே சரியில்லையே..'

கோதாவரி, கொதிக்கிற காபியை வாயில் ஊற்றிக் கொண்ட மாதிரி தவித்ததும், பத்து நாள் டேராவில் வந்தவள், நாலே நாளில் கிளம்பியதும் திருபுரத்தின் சமர்த்தினால்தான்.

''என்ன இந்தத் தடவை சுருக்கக் கிளம்பிட்டா?'' - இப்படி திருபுரத்தின் மாமியார் கேட்டபோதுகூட, திருபுரம் அவளை 'ஏதும் அறியாச் சிறுமியே' என்பதுபோலத்தான் பார்த்தாளே தவிர, அந்த ஃப்ளாஷ்பேக்கைச் சொல்லவில்லை.

இது தனக்கு மட்டுமே தெரிந்த ரகசியமாக இருக்கும் வரையில்தான் கோதாவரி வி.பி-யை அடக்கி ஆள முடியும் என்பது திருபுரத்துக்குத் தெரியும்.

சிலர் மற்றவர்களை மட்டம் தட்டுவதற்காகவே சில வார்த்தைகளை உபயோகிப்பார்கள். அவர்களைக் கூட நாம், நம் பேச்சினால் முந்த வேண்டியிருக்கும். அது பற்றியும்..

அந்தப் பெண்மணி எனக்கு தூரத்து உறவு. எங்கள் குடும்பத்தில் காது குத்து, கல்யாணம் என்று எந்த விசேஷமானாலும் ஊருக்கு முன்னால் ஒரு நெளிந்துபோன சூட்கேஸ் சகிதம் ஆஜராகி விடுவாள்.




இன்றுவரையில் அவளுடைய பெயர் தெரியாது. எல்லோரும் 'சுந்தரத்தும் பெண்டாட்டி' என்பார்கள். ஒரு சிலர் மட்டும், ரகசியமாக 'சேஞ்ச் பார்ட்டி' என்பார்கள்.

எந்த விசேஷத்துக்கு வந்தாலும் இவளிடம் ஆட்டோவுக்குக் கொடுக்க சில்லரையே இருக்காது.

''யாருடாது.. ஒரு இருபது ரூபா இருந்தா கொடேன். ஆட்டோக்காரன் கிட்ட ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கு 'சேஞ்ச்' இல்லையாம்..''

இப்படி சொல்லிச் சொல்லியே பூ முதல், கும்பகோணம் ஈயப் பாத்திரக் கடையில் ரசச் சொம்புவரையில் வாங்கி சேர்த்துக் கொண்டுதான் கிளம்புவாள். கடைசிவரையில் தன்னுடைய ஐந்நூறு ரூபாய் நோட்டை மாற்றவே மாட்டாள்.

இந்த சுந்தரத்தும் பெண்டாட்டிக்கு, அடுத்தவர்கள் என்றாலே ரொம்பவே இளக்காரம்தான்.

''யாருடீ.. சுப்புணி பொண்ணா.. பார்க்க சினிமா ஹீரோயின் மாதிரிதான் இருக்கே. படிப்புல எப்படி.. 'டக்கு'தானா?''

''வெங்கு பாட்டியா.. நீங்க இன்னும் டிக்கெட் வாங்கலையா.. போன வருஷமே பாத்ரூம்ல வழுக்கி விழுந்ததா சேதி வந்ததே..''

''யார்.. அனுவா? உனக்கு என்னமோ ஹார்ட் ஆபரேஷன் அது இதுன்னு பேசிட்டாங்களே.. 'ஜிங்'குனுதானே இருக்கே. இப்ப, எந்தப் பத்திரிகையில எழுதிக் கிழிக்கறே?'' - இப்படி வார்த்தைகளால் குத்திக் கிழிப்பாள்.

'இவளுக்கு யார் மெனக்கெட்டு அழைப்பிதழை அனுப்பியது' என்று, கும்பலுக்குள்ளேயே ரகசிய விசாரணைகள் எல்லாம் நடக்கும். யாருமே இவளிடம் வாய் கொடுத்ததில்லை.. கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு வரையில்.

இப்போது பதினெட்டு வயது கல்லூரி மாணவி ஒருத்தி, இவள் கண்களில் விரலை விட்டு ஆட்டுகிறாள். பெயர் விஜி. வாயை - வாயால் அடிக்கும் வித்தை இவளுக்குத் தெரிந்திருந்தது.

எப்படி..!

ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற ஒரு அறுபதாம் கல்யாணத்துக்கு வந்து விட்டு, தோசைக்கல், கோலக் குழாய்.. இப்படி ஒரு கூடை சாமான்களை வாங்கிக் கட்டிக் கொண்டு, ''கடைக்காரன்கிட்ட ஆயிரம் ரூபா நோட்டுக்கு சேஞ்ச் இல்லையாம். நாராயணா, ஒரு இருநூத்தி இருபது ரூபா கொடேன்'' - இப்படி தன் ஒன்று விட்ட, இரண்டு விட்ட அப்பாவியிடம் மீட்டர் கணக்கில் அளந்து கொண்டிருந்தாள் சுந்தரத்தும் பெண்டாட்டி.

''நான் தர்றேன் அத்தை.. ஆயிரம் ரூபாய்க்கு சேஞ்ச். எங்கே, உங்க ரூபாயை எடுங்க..''

இப்படி, பட்டுப் பாவாடையும் தாவணியுமாக வந்து குதித்தாள் இதை விஜி. இவள் வேறு யாருமில்லை.. அப்பாவி நாராயணனின் மூத்த மகள்!

ஏற்கெனவே இரண்டு முறை, சுந்தரத்தும் பெண்டாட்டி, இவரிடம் இருநூறு, முந்நூறு கைமாற்றாக வாங்கிக் கொண்டு, 'ச்சூ மந்திரக்காளி!' காட்டி விட்டாள்.

இதனால் மனம் புழுங்கிய நாராயணனுக்கும் அவன் மனைவி சங்கரிக்கும் அபயக் கரம் காட்டி, ஸ்ரீரங்கத்து அறுபதாம் கல்யாணத்துக்கு அப்பாவுடன் வந்தவள்தான் இந்த விஜி.

சும்மா சொல்லக் கூடாது.. 'மட்டைக்கேற்ற கொட்டாப்புளி' என்பார்களே.. அதுபோல சரியான ஜோடி!

சுந்தரத்தும் பெண்டாட்டியிடம் ஆயிரம் ரூபாய்த் தாளை வாங்கிக் கொண்டதுமல்லாமல், அதில் பழைய

கடன்களையும் கழித்துக் கொண்டே மீதியைத் தந்திருக்கிறாள் இவள். சு.பெ.முகத்தில் ஈயாடவில்லை.

''அத்தை, போன தடவை சேகர் மாமா வீட்டுக் கல்யாணத்துல நீங்க வாங்கிட்ட இருநூறு ரூபா, அப்புறம் 'சென்னைக்கு டிக்கெட் எடுக்கச் சொல்லி, சேஞ்ச் இல்லே.. அப்புறம் தர்றேன்'னு சொன்னீங்களே.. அந்த நானூத்தி அறுபது ரூபா. எல்லாம் போக மீதி முந்நூத்தி சில்லறை.. இந்தாங்க..''

''உழக்கு லேசுப்பட்டது இல்லே..''

இப்படி கண்டவர்களிடம் எல்லாம் சொல்லிச் சொல்லி மாய்ந்துப் போனாள் சு.பெ.

அதற்குப் பிறகு, நசுங்கின சூட்கேஸுடன் சு.பெ, எந்த வைபவத்துக்குப் போய் இறங்கினாலும் இந்த விஜிதான் வாசலிலேயே நின்று வரவேற்பாள்.

''அத்தை.. வாங்க.. எங்கே வராமப் போயிடுவீங்களோனு கவலைப்பட்டுட்டே இருந்தேன். ஆமா.. நான் கேள்விப்பட்டது எல்லாம் உண்மையா.. போன தடவை ருக்கு சித்தி வீட்டு கிரகப்பிரவேசத்தப்போ, 'ராஜா மாதிரி பையனைப் பெத்து வச்சிருக்கேன். எந்த சிறுக்கி வந்து, என்னையும் என் பையனையும் பிரிக்கப் போறாளோ.. அதுக்கு முந்தி, சட்டுபுட்டுனு ஒரு நல்ல வரனா பார்க்கணும்'னு சொல்லிட்டிருந்தீங்களே.. கடைசியில அவன் 'லவ் மேரேஜ்' பண்ணிட்டு லண்டன் போயிட்டானாமே.. நிஜமா..?''

''ஆட்டோவுக்கு சில்லரை இருக்கா அத்தை? நூறு ரூபாய்க்கு வேணுமா.. ஐந்நூறுக்கா.. என்கிட்ட வேண்டிய சேஞ்ச் இருக்கு..''

''டைனிங் ஹால்லே மெதுபகோடா அம்பது, கோதுமை அல்வா ரெண்டு கிலோ.. உங்களுக்காக எடுத்து வைக்கச் சொல்லியிருக்கேன்.. போதுமோல்லியோ?''

பத்துப் பேரை வைத்துக் கொண்டு, இந்தப் பெண் இப்படிப் பேசும்போது, நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போல இருக்காதா ஒருத்திக்கு?

சு. பெ. இப்போதெல்லாம் எந்த வீட்டு விசேஷத்திலும் அதிகம் தென்படுவதில்லை. அப்படியே பார்க்க நேர்ந்தாலும் அசட்டுப் புன்னகையுடன் நழுவி விடுகிறாள்.

இப்படி 'சாதுரியம் பேசாதேடி.. என் சலங்கைக்குப் பதில் சொல்லடி' எனப் பேசவும் தனி சாமர்த்தியம் வேண்டுமல்லவா?

அதுமட்டுமில்லை.. நம்மிடம் சின்னச் சின்னதாக மற்றவர் கேலி செய்யக்கூடிய.. அல்லது வெளியே தெரியாத குறைகள் இருக்கும்..

முக்கியமாக ஞாபகமறதி. இதுபோன்ற பிராணாவஸ்தைகளைப் பற்றியும் பேச வேண்டாமா..

மறதி ஒன்றும் பிரமாதமான குறை இல்லைதான். ஆனாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் சங்கடங்களைப் பேசியே சமாளிக்க, ரொம்பவும் சாமர்த்தியம் வேண்டும்.

நானும் பல மேடைகளில் பார்த்திருக்கிறேன். விழா முடிந்து, கடைசியில் 'நன்றி நவிலல்'-ன்போது, திரைக்குப் பின்னாலிருந்து யாராவது ரகசியமாகக் குரல் கொடுக்க வேண்டியிருக்கும்.




''சேர் பெர்சன்.. விட்டுட்டீங்க..''

''ஆங்..?''

''சேர் பெர்சன்..''

''அ.. ஆங்.. சேர், டேபிள் அரேன்ஜ் செய்த என் இனிய சிநேகிதி பூஷணி புருஷோத்தமனுக்கும்..''

''அய்யய்யோ.. இல்லே.. சிறப்பு விருந்தினர்..''

''ஆ.. ஓஹ்.. மறந்தே போயிட்டேன். நம்ம விழாவுக்குத் தலைமை தாங்கிய.. தாங்கிய..''

அவஸ்தையான தருணத்தில் சிறப்பு விருந்தினரின் பெயர் மறந்து விடும்.

இதுவே இன்னொரு மறதி மனோன்மணி இருக்கிறாள்.. இப்படித்தான், முக்கிய ஆசாமியை மறந்தே விடுவாள். ஆனால், விளக்குத் திரியைத் தூண்டுவது போல யாராவது எடுத்துச் சொன்னால் போதும்.. அட்டகாசமாக மூக்குக் கண்ணாடியைக் கழற்றி, துடைத்து மாட்டிக் கொண்டு 'கடகட'வெனக் கொட்டுவாள்..

''சகோதரிகளே.. எப்படிப்பட்ட உன்னதமான விழாத் தலைவர் நமக்கு இன்று வருகை தந்திருக்கிறார். அவரது வருகைக்கு, நமது மாதர் சங்கம் என்ன பாக்கியம் பெற்றிருக்கிறது.. திருமதி.. ஊம் ஹூம்.. நான், அவர் பெயரைச் சொல்ல மாட்டேன். (நினைவில் இருந்தால்தானே சொல்வதற்கு!) சொல்லவே மாட்டேன். 'அக்கா' என்று சொல்லுவேன். அவர் சாந்தத்துக்கும் கனிவுக்கும் 'தாயே' என்று கூட அழைக்கலாம்.'' மறதி இருந்தாலும் மனோன்மணி சரியான சூப்பர் டூப்பர்!

நான் கூட மறதி மன்னிதான்! (மன்னனுக்குப் பெண் பாலுங்க.. தப்பா நினைக்க வேண்டாம்..) ஆனால், என்னைப் போன்ற 'சிந்தனை சிற்பி'க்கெல்லாம் (யாருமே இதுமாதிரி பட்டம் எல்லாம் கொடுக்கலை.. நானே போட்டுக் கொண்டேன்..) ஞாபகமறதி சகஜம்தான்.

ஏற்கெனவே அறிமுகமானவர்கள்தான் என்றாலும் கூட நேருக்கு நேர் பார்க்கும்போது, என்ன பேசுவது என்றே தெரியாது. இருவருக்கும் பொதுவான ஒரு சப்ஜெக்ட் வந்து மாட்டும் வரையில் பேச்சு வழ வழா.. கொழ கொழாதான்.

இது போன்ற சமயங்களில் சின்னதாக ஒரு புன்னகை; ப்ளஸ் 'சௌக்கியம்தானே..' இதுவே போதும்.. அது யார், என்ன உறவு என்பதெல்லாம் ஞாபகத்துக்கு வராவிட்டாலும் கூட.

என் அத்தை பாட்டி ஒருத்தி இருந்தாள். கண், காது, எல்லாம் துல்லியம்.. மறதிதான் அநியாயத்துக்கு! அத்தை பாட்டி எங்கே சென்றாலும் பாட்டியின் கணவர், பெண்டாட்டியின் பக்கத்திலேயே உட்கார்ந்து கவலையுடன் பார்த்துக் கொண்டிருப்பார்.

''என்ன தாத்தா.. பாட்டி புடவைத் தலைப்பையே பிடிச்சிட்டு இருக்கீங்க.. விட்டா பாட்டி ஓடிருவாளா..'' - இப்படி பொடிசுகள் கலாட்டா பண்ணும்.

ஆனால், அவர் கஷ்டம் அவருக்குத்தானே தெரியும்? பாட்டியின் கெட்ட குணம்.. யார் வந்து காலில் விழுந்து வணங்கினாலும், ''யார் நீங்க?'' என்று புருவம் சுருக்க மாட்டாள். ஈகோ தடுக்கும் போல. அதனால் பேச்சு, ஜிலேபி சுற்றுவது போல் இஷ்டத்துக்கு சுற்றும்.

எதிராளி: சௌக்கியமா பாட்டி..

பாட்டி: அடடே நீயாடிம்மா..? பரம சௌக்கியம். நீ எப்படி இருக்கே?

எதிராளி: இருக்கேன். ஆமா, நான் யார் தெரியுதா?

பாட்டி (பொக்கை வாய்ச் சிரிப்புடன்): நல்லா கேட்டே போ. நம்ம பொண்ணாச்சே நீ.. மறப்பேனா..? ஆமா, வீட்டுல எல்லாரும் சௌக்கியம்தானே..?

எதிராளி: எங்கே..? எனக்கு இடுப்பு எலும்பு தேய்ஞ்சு போயிருக்கு. ட்ரீட்மென்ட்டுக்கு, மயிலாடுதுறைக்குப் போயிட்டு வர்றேன்.

பாட்டி: மயிலாடுதுறைக்கா?

எதிராளி: ஆமா. என் அக்கா லோச்சுவோட வீட்டுக்காரர் அங்கேதானே டாக்டரா இருக்கார். லோச்சுவை மறந்துட்டீங்களா.. பத்து வயசுல ஒரு தரம் உங்க வீட்டு ஊஞ்சல்ல ஆடி, மண்டைய உடைச்சிக்கிட்டாளே..

பாட்டி : ஓ! நம்ம லோச்சு.. தங்கமான பொண்ணாச்சே.. அவ புருஷன் டாக்டரா? பேஷ்.. பேஷ்!

உரையாடல் இந்த ரீதியில் போகும். எதிராளி பேசி விட்டுப் போன பிறகும் கூட, அவர் யார் என்பது அத்தைப் பாட்டிக்கு ஞாபகத்துக்கு வராது. தாத்தாதான் விளக்க வேண்டும்.

''பேசிட்டுப் போறாளே.. யார் தெரியுதா?''

''அசப்புல உங்க சாயல் அடிச்சது.. ஆமா.. சின்ன வயசுல என்னைத் தவிர..''

''நாசமாப் போச்சு! அவ, என் தம்பி ரங்குவோட பிள்ளை வயித்துப் பேத்தி..'' இப்போது தெரிகிறதா தாத்தா ஏன் பக்கத்திலேயே இருக்கிறார் என்று!

இந்தப் பாட்டிதான் எனக்கு, பேசுவதில் சில சூட்சுமங்கள் இருப்பதைச் சொல்லித் தந்தாள். நான் அறிந்ததை என் பிரியத் துக்குரிய நீங்களும் அறிந்து கொள்ள வேண்டாமா? பாருங்கள்.. எத்தனை தாராள மனசு எனக்கு!

பாட்டியின் அறிவுரைகளை, பாட்டி வாயாலேயே தெரிந்து கொள்வதுதான் சுவாரஸ்யம்..

''எடுத்த எடுப்புல தாயார், பெண்டாட்டி, அக்கா, தம்பினு நீளமா விசாரிக்கக் கிளம்பிடாதே. பொதுவா 'எப்படி இருக்கே?', 'முன்னே பார்த்ததுக்கு இப்ப ஆளே மாறிட்டியே..' - இப்படி விசாரி.

இதுலே கூட, 'முன்னைக்கு இப்ப இளைச்சிட்டியே'ன்னோ, 'பெருத்துட்டியே'ன்னோ சொல்லி வம்புல மாட்டிக்காதே. ஏன் சொல்றேன்னா.. இவளையே யாருனு தெரியாதப்ப.. முன்னாடி இவ எப்படி இருந்தாங்கறது மட்டும் உனக்கு எப்படி தெரியும்?''

''பொதுவா, 'வீட்டுல எல்லாரும் சௌக்கியம்தானே'னு கேளு.. போதும். இவளுக்கு வரன் பார்த்துட்டிருக்கலாம்.. கல்யாணமாகியிருக்கலாம்.. கல்யாணமாகி கோவிச்சுக்கிட்டு பொறந்த வீட்டுக்கே வந்திருக்கலாம். பேசப் பேச அவளே சொல்லுவா. அதுல ஏதாவது ஒரு நூல் முனை கிடைக்கும். அதை வச்சிட்டு சமாளிச்சிடலாம்.''

பாட்டிக்கு, தன் ஞாபக மறதியினால், யார் மனசையும் புண்படுத்தி விடக் கூடாது என்கிற நல்ல எண்ணம். அதற்காகவே இந்த வயசிலும் இத்தனை அக்கறை எடுத்துக் கொள்வாள்.

ஆனால்..

அலுவலகங்களில் வேலை செய்யும் நம் சகோதரிகளில் சிலர் - பேசத் தெரியாமல் பேசி விட்டு, முழி பிதுங்குவார்கள் பாருங்கள்..

அதுபற்றியும் விடாமல்..

என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள்.. தன் சொந்தக் கால்களில் நின்று சம்பாதிக்கிற பெண்ணின் முகத்தில்

தனி கம்பீரம் இருக்கும். கூரிய நோக்கு இருக்கும். புத்திசாலித்தனமும் சாதுர்யமும் இருக்கும்..




''ஐஸ்.. ஐஸ்..'' - என்கிறாள் தாம்பரம் வீணா.

ஐஸ்தாம்மா.. நான் சொல்லப் போகிற விஷயம் கொஞ்சம் எரிச்சலை உண்டாக்கும் என்பதால் ஐஸ்.. இதை சீரியஸாக எடுத்துக் கொள்ளாமல், சிரித்துக் கொண்டே ஆமோதிக்கலாம். அல்லது சிரித்தபடி படித்து விட்டு, சீரியஸாக சிந்திக்கலாம். அதெல்லாம் உங்கள் வசதி..

அரட்டை இல்லாத ஆபீஸ் கிடையாது.. உண்டா இல்லையா?

அட, லன்ச் டயத்தில் டிபன் டப்பாவில் தயிர் சாதத்துக்குத் தொட்டுக் கொள்ள ஊறுகாய் இல்லையா.. கிடைக்கிறவள் தலையைக் கொஞ்சம் போல, மாவடு கடிக்கிற மாதிரி கடிக்கலாம்.

தப்பே இல்லை..

என்ன சொல்கிறீர்கள்?

அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

பகல் நேரத்தில் அரை மணி நேரம் தூங்குவது எப்படி இழந்த சுறுசுறுப்பை மீட்டுத் தருகிறதோ.. அதுபோல, கொஞ்சம் வம்பு பேசுவதும் மூளையைப் புத்துணர்வாக்குமாம்.

கேட்பதற்கே நன்றாக இருக்கிறது இல்லையா?

ஆனால், இந்த வம்பு என்பது, யாரையும் கண் கலங்கச் செய்து, மூக்கை மிளகாய்ப் பழமாக ஆக்கி விடக் கூடாது..

ஒருவரையருவர் சீண்டுவது, காலை வாரி விடுவது, மூக்கை அறுப்பது, இல்லாததை இருப்பது போல 'பில்ட்-அப்' செய்வது, 'பெப்பரப்பே' என்று பெருமை பீற்றிக் கொள்வது, மாமியாரைப் பற்றி மெகா சீரியல் வாயாலேயே ஓட்டுவது, கணவர்களின் சாகசம், சரசம், அவர்கள் சமைக்கும் வெறும் ரசம்.. இத்தனையையும் வர்ணிப்பது, சண்டை மூட்டி விடுவது, தான் மூட்டிய சண்டையில் தானே பலிகடா ஆவது, எதிராளி கொஞ்சம் மக்காக, லூசுத்தனமாக இருந்தால் அவர் மண்டையில் ஒட்டி ஒட்டி மசாலா அரைப்பது, அப்புறம்.. கூட வேலை பார்க்கும் ஆண்பிள்ளைகளின் ஜொள்ளுகளை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்வது.. பின் அதைப் பற்றி சிநேகிதிகளிடம் தம்பட்டம் அடித்துக் கொள்வது, விஷயம் கை மீறிப் போன பின்பு அழுது அமர்க்களப்படுத்துவது..

இது எல்லாமே - மூக்குக்கும் முகவாய்க்கும் நடுவில் ஒன்றரை இன்ச்சிலிருந்து இரண்டு இன்ச் வரையே இருக்கும் வாயினால் உண்டாகும் வினைகள்தான் என்றால், கோபித்துக் கொள்ளக் கூடாது.

இப்படித்தான் என் சிநேகிதியின் உறவுக்காரப் பெண் வனிதா, பெரிய கம்ப்யூட்டர் சென்டரில் வேலை பார்க்கிறாள். நிறைய சம்பளம்.. ஒரே சங்கடம்தான். மத்தியான 'லன்ச்' நேரம் பார்த்து, ஒரு நாளைப் போல சீனியர் இன்ஜினீயர் சோமப்பா என்பவர் ஆபீஸ் ஹாலில் பிரவேசிப்பார். மந்தகாசப் புன்னகையுடன் ஒவ்வொருத்தரிடமிருந்தும் கொஞ்சம் கொஞ்சம் சாம்பிள் எடுத்து ருசித்து விட்டு, ''ஆஹா.. பிரமாதம்'', ''அருந்ததி.. பீன்ஸ் இன்னும் கொஞ்சம் வெந்திருக்கலாம்..'', ''வனிதா.. அது என்னது.. எனக்குத் தெரியாம மறைச்சு வச்சு சாப்பிடறே.. புளியஞ்சாதமா.. தொட்டுக்க என்ன.. ஜவ்வரிசி வடாமா.. கொண்டா.. கொண்டா..'' இப்படி, வெண்ணெய் திருடும் கிருஷ்ணன் மாதிரி பெரிய தொப்பை குலுங்க, பாய்ந்து பாய்ந்து எடுத்து சாப்பிடுவதில் புலி!

அலுவலகப் பெண்கள் தங்களுக்குள் இவருக்கு 'அண்டங் காக்கா' என்று செல்லப் பெயர் வைக்கும் அளவுக்கு மனுஷனின் சாப்பாட்டு சபலம் வெகு பிரசித்தம்.

அன்றைக்கு இவள் வேலை பார்க்கும் டிவிஷனில் புதுசாக ஒருத்தி.. கோயம்புத்தூரில் இருந்து வந்திருக்கிறாளாம்..

''நீங்க லஞ்ச் கொண்டு வந்திருக்கீங்களா?'' - டெஸ்பாட்ச் வத்சலா, புது வரவைப் பார்த்துக் கேட்டாள்.

''உம்..''

''அப்ப எங்களோட சாப்பிடலாம்..''

இவ்வளவோடு நிறுத்திக் கொண்டாள் டெஸ்பாட்ச்.

''ஆனா, சின்ன டப்பாவெல்லாம் போதாது'' - இது வனிதா.

''ஏன்?''

புதுசு விழிக்க, வனிதா குறும்புடன் சொன்னாள்..

''இங்க காக்காவுக்குப் போடவே உங்க டிபன் டப்பா போதாது.. புரியல்லே.. சீனியர் இன்ஜினீயர் சோமப்பாவைத்தான் சொல்றேன்.. இன்னிக்கு நீங்களே பார்க்கப் போறீங்க. ஒருத்தரும் முழுசா சாப்பிட முடியாது.. காக்கா மாதிரி கொத்தி, குதறிட்டுப் போயிடுவார்.''

புது வரவின் முகம் ஒரு மாதிரி கோணலாகியது. உதடு அழுகையில் பிதுங்கியது.. மொத்த ஆபீஸும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவள் தாம் தூம் எனக் குதித்துக் கொண்டே சோமப்பாவின் அறைக்குள் ஓடினாள்.

அடுத்தாற்போல் பெரிய ரகளை.. சண்டை.. அழுகை ஒப்பாரி. எல்லாம்.

''எனக்கு என்ன தெரியும் ஆன்ட்டீ.. அந்த சுரேகா, சோமப்பாவோட வொய்ஃப்பாம். இந்த விஷயம் டெஸ்பாட்ச் வத்சலாவுக்குக் கூடத் தெரியுமாம். எனக்குத் தெரியாதே.. அவ கிட்டயே போய்..''

தற்போது வனிதாவின் மிகப் பெரிய எதிரி, சோமப்பாதான்.

இருக்காதா பின்னே.. கோயம்புத்தூரில் இருந்த பெண்டாட்டியை மெனக்கெட்டு மாற்றல் வாங்கி இங்கே கொண்டு வந்தால்..

வந்த முதல் நாளே இப்படியா?

இப்போதெல்லாம் வனிதாவுக்கு லன்ச் டயமே பத்து நிமிஷம்தானாம். அதற்குள் சீனியர் இவள் தலையில் ஆயிரம் வேலைகளைச் சுமத்துகிறாராம்..

புதுசாய்ப் பார்க்கிறவர் யார், என்ன என்கிற விவரம் தெரியாமலேயே, ரொம்ப நாள் பழகினது போலப் பேசுவதில் எத்தனை அவஸ்தைகள் இருக்கிறது தெரியுமா..

இத்தனைக்கும், பெண்ணுக்குப் பெண்ணே உளறிக் கொட்டி, கிளறி, மூடி வைத்து விடுவார்கள்.

இதற்கெல்லாம் சரளா வைத்தியநாதன்தான் லாயக்கு.. அவள் வாய் சாமர்த்தியம் பற்றி..

**யா**ர் என்ன பேசினாலும் மில்லி மீட்டர் புன்னகையுடன் 'கம்'மென்று உட்கார்ந்திருப்பார்கள் சில சகோதரிகள். என் பாட்டி இது போன்றவர்களை 'அழுந்தினச் சமர்த்து' என்பார். சரளா வைத்தியநாதனை தாராளமாக அப்படிச் சொல்லலாம்.

வங்கியில் வேலை பார்க்கிறாள். அவளுடைய அனுபவத்துக்கு மேலே மேலே தேர்வு எழுதியிருந்தால், ஆபீஸர் பதவியே கிடைத்திருக்கும். சம்பளம், படி எல்லாமும் தாராளமாக அதிகரித்திருக்கும்.

அசையவில்லையே அம்மணி..

''எதுக்கு? ஆபீஸராயாச்சுன்னா மூணு வருஷத்துக்கு ஒரு ஊர்னு மாறிட்டே இருக்கணும். என் குடும்பம் பெரிசு. அதெல்லாம் இதுவே போதும்.''

இதுதான் சரளா!

இவளுக்கு வங்கியில் வேலை பார்க்கும் அத்தனை பேருடைய சங்கதியும் தெரியும். ஆனால், யாரைப் பற்றியும் வாயைத் திறக்க மாட்டாள். ஒருநாள் 'திடும்'மென்று அக்கவுன்டன்ட் ஆதிவரதன் இவளிடம் வந்து முழங்கையைக் காட்டிக் கேட்டார்..

''மேடம்.. மனுஷக் கடிக்கு தொப்புளைச் சுத்தி ஊசி போட்டுக்க வேண்டியிருக்குமா..?''

சரளா, லெட்ஜரிலிருந்து பார்வையை நகர்த்தி, ஆதியின் முழங்கையைப் பார்த்தாள்.

''கடி கொஞ்சம் ஆழமாத்தான் இருக்கு.. எதுக்கும் டாக்டரைப் பார்த்து ஒரு ஏ.டி.சி ஊசி போட்டுக்குங்க..'''

''சரி..''

எழுந்து இரண்டு அடி நகர்ந்த ஆதி, துக்கம் தொண்டையை அடைக்க சரளாவிடம் வினவினார்..

''யார் கடிச்சதுனு கேக்கவே இல்லையே மேடம்..''

''அதான் மனுஷக் கடினு சொல்லிட்டீங்களே.. மத்தது எல்லாம் ஆபீஸ் நேரத்துல எதுக்கு? போங்க.. போய் டாக்டரைப் பார்த்து ஊசியைப் போட்டுட்டு வாங்க..''

இதுதான் சரளா வைத்தியநாதன்!

லஞ்ச் நேரத்தில் வங்கி முழுக்க ஆதிவரதனின் கேஸை அக்குவேறு ஆணிவேறாக அலசும். சரளா தன் டிபன் பாக்ஸ் இட்லியை வெட்டிக் கொண்டிருப்பாள்.

''ஏய், மெனக்கெட்டு ஆதி, இவகிட்ட தன் சோகக் கதைய சொல்ல வந்தாருப்பா.. இவதான் கேக்கலே..''

''பாவம்டீ ஆதி.. பெண்டாட்டி ரொம்பவும் பொல்லாதவ போல இருக்கு..''

''நீ பேச்சுக் கொடுத்துப் பாரேன்.. மனசுல இருக்குற பாரத்தை மரம், மட்டை கிட்டயாவது சொல்லிடணும்னு பெரியவங்க சொல்லுவாங்க..''

பேச்சு இப்படிப் போய் கடைசியில் கிண்டலிலோ சண்டையிலோ முடியும். கண்டுகொள்ளவே மாட்டாள் சரளா.

என்ன இருந்தாலும் பெண்டாட்டியிடம் கடிபட்டவனிடம் நாலு வார்த்தையாவது அனுசரணையாகப் பேச வேண்டும் என்று கேஷியர் கலாவதிதான் போனாள்.



''ஆதி.. எனக்குத் தெரிஞ்ச நல்ல சைக்யாட்ரிஸ்ட் இருக்கார். அவர்கிட்ட அப்பாயின்ட்மென்ட் வாங்கித் தரட்டுமா?''

''எதுக்கு?''

ஆதிவரதனுக்கு ஏற்கெனவே முட்டைக் கண்கள். இதில் சோடாபுட்டி வேறு. பரக்கப் பரக்க விழித்தார். கலாவதி தொண்டையைச் செருகிக் கொண்டு ஓரக் கண்களால் மற்றவர்கள்.. முக்கியமாக சரளா வைத்தியநாதன்.. தன்னைக் கவனிக்கிறாளா என்று பார்த்துக் கொண்டே சொன்னாள்..

''சாதாரணமா, கோபத்தோட உச்சகட்டத்துல சில லேடீஸ் இது மாதிரி பிஹேவ் பண்ணுவாங்கதான். இது ஹிஸ்டீரியாவாகத்தான் இருக்கணும்னு அவசியமே இல்ல. பாருங்க.. ஒவ்வொருத்தரும் ஏதாவது ஒரு சமயத்துல உணர்ச்சிவசப்பட்டுடறாங்க. 'குட் பிஹேவியருக்கும் பைத்தியக்காரத்தனத்துக்கும் நடுவுல கண்ணுக்குத் தெரியாத மெல்லிசு கோடு இருக்கறதாகவும், சராசரியா எல்லாருமே அப்பப்ப இந்தக் கோட்டைத் தாண்டிட்டு மறுபடியும் நார்மலான கேரக்டருக்கு வந்துடுவாங்க'னும் ஃபிராய்டு சொல்றார்..''

ஆபீஸ் முடிந்து விட்டதால் ஆதி, 'பேக் - அப்' பிலேயே குறியாக இருந்தார்.

''யார் சொல்றார்?''

''ஃபிராய்டு.. ஃபிராய்டு சொல்றார்..''

''அப்படியா.. என்கிட்ட சொல்லலையே..''

டேபிளுக்கு அடியில் போய்விட்ட டிபன் டப்பா மூடியை சிரமப்பட்டுக் குனிந்து தேடிக் கொண்டே அப்பாவியாக சொன்னார் அவர்.

''ஆதி சார்.. நீங்க ரொம்ப டிப்ரஷன்ல இருக்கீங்கன்னு தெரியுது. காலையில நீங்க சரளா வைத்தியநாதன்கிட்ட கையைக் காட்டி 'மனுஷக் கடிக்கு ஊசி போட்டுக்கணுமா'னு விசாரிச்சதை நானும் கேட்டேன். மனசு கேக்கலை. பாவம் நீங்க! இன்னிக்கு வேணும்னா ஊசி போட்டுக்கலாம். தினமும் இது மாதிரி பைத்தியக்காரத்தனமா கடிச்சு வைக்கிற ஹிஸ்டீரிகல் ஒய்ஃப் கூட எப்படி குடித்தனம் நடத்துவீங்க?''

''வாட் நான்சென்ஸ்?!''

ஆதிவரதன் டேபிளை ஓங்கி அறைந்ததில் எங்கேயோ இடுக்கில் சிக்கியிருந்த டிபன் டப்பா மூடி, மகாவிஷ்ணுவின் கையிலுள்ள சக்கரம் மாதிரி எகிறிப் பறந்து, பத்தடி தொலைவில் கம்ப்யூட்டரில் தன் பையனுக்கு மெயில் அனுப்பிக் கொண்டிருந்த மானேஜரின் வழுக்கை மண்டையில் போய் அடித்தது.

அதே நேரம், ஆபீஸ் சுவரில் இருந்த காலண்டர் அறுந்து விழுந்தது. குண்டுசீயால் இணைக்கப்படாத வவுச்சர்களும் செக்குகளும் காற்றில் படபட வெனப் பறந்தன.

இத்தனைக்கும் சரளா ஆடாமல், அசையாமல் இருந்தாள். அழுந்தின சமர்த்தாச்சே!

''யாருக்கு ஹிஸ்டீரியா? என் ஒய்ஃபுக்கா? நான் வந்து உன்கிட்ட சொன்னேனா? போன மாசம் ரெண்டாயிரத்து சொச்ச ரூபாயை கஸ்டமர்கிட்ட தொலைச்சிட்டு, 'அக்கவுன்ட் டேலி ஆகலை'ன்னதும் மயக்கம் போட்டு, டிராமா செஞ்சியே.. ஹிஸ்டீரியா உனக்கா? இல்லே, என் ஒய்ஃபுக்கா? இதைச் சொல்ல உனக்கு என்ன யோக்யதை இருக்கு?''

இதற்குள் மொத்த ஆபீசும் இவர்களைச் சுற்றி! நம் சரளா கொஞ்சம்கூட அலட்டிக் கொள்ளாமல் வீட்டுக்குப் புறப்பட்டு விட்டாள்.

''சரளா மேடம்.. பாருங்க! ஒண்ணுமில்லாத சுண்டக்கா மேட்டரை இந்த லேடி எப்படி 'பில்ட்-அப்'

பண்ணிட்டானு.. மனுஷக் கடினுதானே சொன்னேன்.. யார் கடிச்சதுனு சொல்ல வந்தப்ப நீங்க காது கொடுத்துக் கேட்டிருந்தா, என் ஒய்ஃஃபுக்கு இப்படியரு பைத்தியக்காரப் பட்டம் கிடைச்சிருக்காதுல்ல?''

ஆதியின் ஆத்திரத்தில் வெளிநாக்குடன் போட்டி போட்டுக் கொண்டு உள் நாக்கும் சிவந்து தக்காளிப் பழம் போல வெளியே தொங்கியது.

''இப்ப என்ன.. உங்களுக்கு ஒரு வயசுல குழந்தை இருக்குறதும், அதுக்கு பல் முளைக்கறதால துறுதுறுனு எதைப் பார்த்தாலும் கடிக்கணும்னு தோணும்ங்கறதும் எனக்குத் தெரியும்..''

''உங்களுக்குத் தெரிஞ்சா போதுமா.. அதை எங்களுக்கும் சொல்லித் தொலைக்க வேண்டியது தானே.. அய்யோ பாவம்னு யோசனை சொல்லப் போயிட்டு மனுஷன் நாயை விட மோசமா கடிச்சிட்டான்.. ச்சே!''

கலாவதி அழ..

''இதப் பாரு.. எனக்கு எதெல்லாமோ தெரியும். அதையெல்லாம் கடை பரப்ப ஆபீஸ்தான் கிடைச்சுதா..''

சரளா ஹேண்ட் பேகை ஒரு சுழற்று சுழற்றி தோளில் போட்டுக் கொண்டு கிளம்பி விட்டாள்.

இவளிடம் அலுவலக நண்பர்களுக்கு மட்டுமில்லை.. திருவாளர் வைத்தியநாதனுக்குமே பயம் தான்.

''மேடம்.. அவ நாக்குல பிளேடு வச்சிருக்காளா?'' - இப்படித்தான் நொந்துபோய்க் கேட்பார்.

இதை எல்லாம் போய் அவளிடம் கேட்க முடியுமா என்ன? முடியாதுதான்.

ஆனாலும் நாம்..

**ச**ரளா வைத்தியநாதன் மாதிரியான அழுந்தினச் சமர்த்துகள் அலுவலகத்தில் இப்படி இருப்பது ஒருவிதத்தில் நல்லதுதான். தேவையில்லாத பேச்சுக்களை குறைத்து வேலையைப் பெருக்கலாம். ஆனால், வீட்டிலுமா தன்னை ஒரு அதிகாரியாகவே பாவித்துக் கொள்வது? சரளா அப்படித்தான்!

அதாவது, 'இதோ.. இதோ.. நம் ஜோக்கைக் கேட்டு, சரளா சிரிக்கப் போகிறாள்' என்று திருவாளர் வைத்தியநாதன் ஆவலோடு காத்திருந்தால் 'இதுக்கு நான் சிரிக்கணுமாக்கும்' என்று கேட்டு விட்டு நகர்ந்து விடுவாள்.

ஒரு தடவை வைத்தியநாதன் ஹோட்டலில் இடம் பிடிக்கப் பாய்ந்ததில் குப்புற அடித்து விழுந்தார். இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு முதலில் சிரித்தது சரளாதான்.



ஆனால், இந்தப் பெண்டாட்டி தாசன் சொன்னது என்ன தெரியுமா?

''சரளா சிரிக்கறாள்னா நான் எத்தனை தடவை வேணுமானாலும் குட்டிக்கரணம் போடத் தயார்மா..''

சரளாவுக்கு, கணவரின் தியாக மனப்பான்மை எல்லாம் தெரியாது.

ஆபீஸில் யாராவது அசிஸ்டென்ட் கிளார்க்குக்கு லீவு வேண்டுமானால், ''மேடம்.. மேடம்..'' என்று அவள் பின்னாலேயே சுற்ற வைப்பாளே.. அதேபோல, வைத்தியநாதன் தன் அக்கா, தங்கை வீட்டுக்குப் போக வேண்டுமென்றாலும் ''சரளா.. சரள்.. சரு..'' என்றெல்லாம் இவள் எதிரில் காவடி எடுக்க வேண்டும். லேசில் பதில் வராது. என்னவோ அப்போதுதான் இந்தியா - அமெரிக்கா அணு ஆயுத ஒப்பந்தத்தில் தான் கையெழுத்திட வேண்டும் என்பதுபோல மோட்டு வளையைப் பார்ப்பாள்.. கொஞ்ச நேரம் கம்ப்யூட்டர் மவுஸை நகர்த்துவாள்.. ஏதோ ஒரு லோன் சாங்ஷன்.. 'எப்படி கொடுக்கப் போயிற்று?' என்று மானேஜரிடம் போனில் கேட்கத் துவங்கி விடுவாள்.

''சரள்.. என் தங்கை வீட்டுக்குப் போகலாம்னு இருக்.. ஸாரி.. போகலாமா?''

''அவ நாலஞ்சு நாளாக் கூப்பிட்டுக்.. அவ பேரனோட 'பர்த் டே'க்குக் கூட நாம போகல..''

''ஆமா.. இங்கே இருந்த புத்தகத்தை எங்கே காணும்?''

''சமையற்கார மாமி எடுத்தாப்பல இருக்கு. இரு. நான் போய் வாங்கிட்டு வர்றேன்..''

வைத்தியநாதன், சின்னப் பையன் மாதிரி 'குடுகுடு'வென சமையலறைக்கு ஓடிப் போய், கையில் புத்தகத்துடன் திரும்பி வருவார்.

''மைதிலி.. அதான் என் தங்கை.. அவகிட்ட போன்ல நீயே பேசிடறியா.. வேணாம்.. உனக்கு எதுக்கு வீண் சிரமம்? நானே பேசிடறேனே.. சாயந்திரம் டின்னருக்கு சரவணபவனுக்கு வரச் சொல்லி.. இல்லேயில்லே.. உன் இஷ்டம்..''

சரளா ஒரு கையில் காபி டம்ளருடன் பத்திரிகையை ஆரம்பம் முதல் கடைசி வரை அலசுகிற வரையில் வைத்தியநாதன் கால் மாற்றிக் கால் வைத்துத் தவிப்பார். அடிக்கடி, மனைவி எந்தப் பக்கத்தை ஊன்றிப் பார்க்கிறாள் என்று கழுத்தை நெம்பிப் பார்ப்பார்.

''உம். என்ன கேட்டீங்க..''

''யாரு.. நானா.. நான் ஒண்ணுமே கேட்கலையே சரள்..''

''என்னமோ.. மைதிலி கூப்பிடுறான்னீங்க..''

''அ.. ஆமா.. போகலாமா.. எங்கே வரச் சொல்ல.. சரவணபவனா.. சங்கீதாவா..''

''டின்னரை முடிச்சிட்டு, நீங்க மைதிலியோட அவ வீட்டுக்குப் போங்க. நான் வீட்டுக்குத் திரும்பிடறேன்..''

''அய்யோ.. ஏன் சரள்?''

''என்ன, ஏன் சரள்.. உங்களை ஜெனரல் செக்-அப்புக்கு இந்த வாரம் டாக்டர் வரச்சொல்லி இருக்கார் இல்லையா.. மைதிலி வீட்டுக்குப் பக்கத்துலதானே டாக்டரோட கிளினிக்? அப்பிடியே போயிட்டு வந்துடுங்க..''

வைத்தியநாதன் முனி அடித்தாற்போல நிற்பார். சரளாவைக் கல்யாணம் செய்து இத்தனை வருடங்களாகிறது. அவள் எதை நிஜமாகச் சொல்கிறாள்.. எதை வேண்டுமென்றே கிண்டலாகச் சொல்கிறாள் என்பதை இன்னமும் அவரால் புரிந்து கொள்ள முடியாது.. நாத்தனார் வீட்டுக்குப் போவதில்தான் இத்தனை இடியாப்பச் சிக்கல் என்றில்லை..

சாதாரணமாக சமையல்கார அம்மா, சரளாவைப் பார்த்து ''பொரியல் என்ன பண்ணட்டும்?'' என்று கேட்டால்..

''என்னைக் கேட்டா? அவரைக் கேளுங்க..'' என்பாள்.

வைத்தியநாதன் இந்த வார்த்தையையே தனக்கு அளிக்கப்பட்ட மலர்க் கிரீடமாக நினைத்துக் கேட்பார்..

''என்ன காய் இருக்கு?''

''கொத்தவரை..''

''பேசாம பருப்புசிலியா பண்ணிடுங்க..''

சரளா, சட்டென வெடிப்பாள்.

''நாலு நாள் முந்திதான் பருப்புசிலி..''

''அப்ப.. கூட்டா பண்ணிடச் சொல்லேன் சரள்..''

''ஒரு கரண்டிதான் செலவாகும். மிச்சமெல்லாம் வேலைக்காரிக்குத்தான்..''

''அப்படின்னா..''

''கொத்தவரங்காய தேங்கா, பருப்பு போட்டு கறியா பண்ணச் சொல்லுங்க..''

''ஓ.. ஆமாமா.. பச்சை பசேல்னு.. பிரமாதமா இருக்கும்..''

வைத்தியநாதன் இதற்கும் குழந்தை மாதிரி குதூகலிப்பார். அந்த அல்ப சந்தோஷத்தைக் கூட அனுபவிக்க விடமாட்டாள் சரளா..

''கொத்தவரங்காய் கறியில், இவருக்குத் தேங்காயே சேர்க்காதீங்க.. வெறுமே உப்பு போட்டு வேக வச்சா போதும்.

தேங்காய்ல கொலஸ்ட்ரால் இருக்கு.''

பரிதாபத்துக்குரிய வைத்தியநாதன் இந்த அழுந்தினச் சமர்த்தினால், தினம் தினமும், 'நான் சிரிக்கிறேன்.. சிரிக்கிறேன்.. சிரிப்பு வல்லே.. நான் அழுகிறேன்.. அழுகிறேன்.. அழுகை வல்லே..' - இப்படி நடிகர் திலகம் ரேஞ்சில் நடித்துக் கொண்டிருக்கிறார் என்றால்..

இந்த சரளாவையும் மிரள வைக்கிற ஒரு பிரஜை உண்டு..

''அய்யோ.. அவ கிட்டப் பேசி ஜெயிக்கவே முடியாது..''

- இப்படி சரளா யாரைப் பார்த்து, பாத்ரூம் கதவுக்கு இடுக்கில் ஒளியும் கரப்பான் பூச்சி போலப் பதுங்குவாள் என்றால்..

அவள்தான் அவர்கள் வீட்டு சமையற்கார அம்மாள் சம்பூர்ணம்!

இவளைப் பற்றியும் பேசவேண்டாமா?

**''வீ**ட்டுக்காரர்கிட்ட மிரட்டியே காரியத்தை சாதிக்கலாம். வாய்ல கொழுக்கட்டையை அடைச்ச, இடிச்ச புளி மாதிரி இருந்தே ஆபீஸ்ல காரியம் சாதிக்கலாம்.. ஆனா, இந்த சம்பூர்ணத்துக்கிட்ட அந்த டெக்னிக் எல்லாம் செல்லாதுங்கறேன். நீ பேசாம இருந்தா.. நானும் பேசாம, தலைக்கு ஒரு மணைப் பலகைய அண்டக் கொடுத்துட்டு, 'அக்கடா'னு படுத்துடுவேன். யாருக்கு நஷ்டம்?''



சமையல்கார மாமி சம்பூர்ணம், வேண்டுமென்றே, சரளா காதுபடச் சொல்லுவாள்.. எதைப் பற்றியும், யாரைப் பற்றியும் கவலைப்பட மாட்டாள்.

''அரை கிலோ கொத்தவரங்காயை பொடிப் பொடியா நறுக்கி, உப்புப் போட்டு வேக வச்சு, அப்படியே திங்கறதாமே.. மாட்டுக்குப் போட்டாக் கூட சீந்தாது.. இது ஒரு சமையல்.. இதை சமைக்க, கல்குண்டாட்டம் ஒரு சமையல்காரியாக்கும்..''

இப்படி அனத்திக் கொண்டே, கொத்தவரங்காயை உப்புப் போட்ட வெந்நீரில், நறுக்காமல் கொள்ளாமல் அப்படியே வேகப் போட்டு, ஒரு கொதி வந்ததும், மூங்கில் தட்டில் போட்டு, வெயிலில் வைத்து விடுவாள்.

காக்காய் வாய்க்குப் போக, எஞ்சிய நாலு காயை பத்திரமாக எடுத்து, பாட்டிலில் போட்டு மூடி வைப்பாள்.

''உங்களை நான் கொத்தவரங்காயைப் பொரியல் பண்ணச் சொன்னேனா.. இல்லையா?''

சரளா கேட்டு முடிக்கும் முன்பே, 'பட்'டென 'கேப்' மாதிரி வெடிப்பாள் சம்பூர்ணம்.

''ஆமா.. அதுவும் வாய்வுதானே.. எதுக்கு வம்பு? அதை, அப்படியே வேக வச்சு, வெயில்ல உலர்த்தி வத்தலாக்கி, அள்ளி வச்சிருக்கேன். மழைக் காலத்துக்கு உதவும்..''

''அதையும் எண்ணெய்லதானே பொரிக்கணும்?''

''ஆமா.. நான் உலர்த்தி எடுத்து வச்சிருக்கேன்னு சொன்னேனே தவிர, உங்களுக்குனு சொல்லலையே.. ஏதோ, உங்களுக்குத்தான் தலையெழுத்து.. கை நிறைய சம்பாதிச்சாலும், வாய் நிறைய சாப்பிட முடியலே. எனக்கென்ன தலையெழுத்து? ஒரு பிரஷர், சுகர், மூச்சுப் பிடிப்பு, முதுகு வலி எதுவுமில்லே.. வயசு அறுபதாறது.. ஓடியாடி வேலை செய்ய தெம்பு வேண்டாமா.. என்னால டயட், கியட்லாம் இருக்க முடியாதும்மா..'' ''சரி.. சரி.. உங்களை ஒண்ணும்

சொல்லிடல. இருக்கறதைப் போடுங்க..''

''இருக்கிறது என்ன.. இருக்கறது.. வாழைத்தண்டை வில்லை வில்லையா நறுக்கி, உப்பு, எலுமிச்சைச் சாறு பிழிஞ்சு சாலட் செஞ்சு வச்சிருக்கேன். அவருக்கு எலுமிச்சை ஆகாது.. அஸிடிடினு தெரியும்.. வெறுமே வாழைத்தண்டை நறுக்கி வச்சிருக்கேன். 'கம்'முனு ஒரு மணத்தக்காளி வத்தல் குழம்பு.. ரசம் பண்ணலை..''

''ஒரு ரசம் வச்சிருக்கலாம்..''

''வச்சிருக்கலாம். அதுக்கு ரெண்டு தக்காளி, கொட்டப்பாக்கு அளவு புளி, பெருங்காயம், கறிவேப்பிலை.. அது கெட்ட கேட்டுக்குக் கால் ஆழாக்கு துவரம்பருப்பு.. இத்தனை சிங்காரமும் செஞ்சு ரசத்தை வச்சா, நீங்க தெளிவா ஒரு கரண்டி விட்டுட்டா அதிசயம். உங்க வீட்டுக்காரர் சாதத்துல குளம் கட்டி அடிக்கிறது போறாதுன்னு, தம்ளர்லயும் வாங்கிக் குடிச்சிட்டு, குப்புறப் படுத்துக்கிட்டு, 'சரளா.. சரளா.. எருமை வாகனத்துல எவனோ வந்து கூப்பிடறான்'னு புலம்புவார்.. தேவையா உங்களுக்கு?''

''வத்தக் குழம்பும்தானே காரம்?''

''அவருக்கு யார் குழம்பு போடப் போறா.. பச்சை மணத்தக்காளிய, காயும் இலையுமா வதக்கி வச்சிருக்கேன். அதை சாதத்துல போட்டுப் பிசைஞ்சு நாலு கவளம் சாப்பிடச் சொல்லுங்கோ. நான் சொல்லக்கூடாது.. பெருமாள் கோயில்லே பெருக்கலாம், மெழுகலாம்.. அதுக்குன்னு காலை நீட்டிப் படுத்து, சொந்தம் கொண்டாட முடியுமோ.. அவர் என் தம்பி மாதிரி.. ஆனாலும் நீங்க ஒரு வார்த்தை சொன்னாலும் 'நறுக்'குனு சொல்லுவீங்க..''

இதற்கு மேல் பேசமாட்டாள் சரளா.. சம்பூர்ணம் இந்த வீட்டில் பத்து வருடங்களுக்கு மேல் குப்பை கொட்டிக் கொண்டிருக்கிறாள். குடும்பத்தில் ஒருத்தியாகப் பழகுவதால், யார் யாரிடம் எப்படிப் பேச வேண்டுமோ அப்படிப் பேசி ஜெயிப்பாள்.

சரளாவிடம் மேற்கண்டவாறு வெண்ணெயாக பேசிவிட்டு, அவள் ஆபீசுக்குப் போனவுடன், கரண்டியும் கையுமாக வைத்தியநாதனின் எதிரில் வந்து நிற்பாள்.

''என்ன..''

''எவ்வளவுதான் பெண்டாட்டிக்கு சல்யூட் அடிக்கறதுன்னு ஒரு விதிமுறையே கிடையாதா..''

''அது.. அது வந்து மாமி.. அவ, என் நல்லதுக்குத்தானே சொல்றா?''

''என்ன நல்லதுக்கு? உங்க தங்கை வீட்டுக்குப் போயிட்டு, ஹோட்டலுக்குப் போயிட்டு, அப்படியே டாக்டர் வீட்டுக்கும் போயிட்டு வரச் சொல்லலையா?''

''அன்னிக்கு 'செக் அப்'புக்குப் போக வேண்டிய நாள்.. அதான்..''

''நல்லாயிருக்கு.. யார்கிட்டயும் சொல்லாதீங்க. வயிறு வலிக்கச் சிரிப்பாங்க.. தங்கையோட ஹோட்டலுக்குப் போய், வயித்து வலிய வரவழைச்சுப்பீங்க இல்லையா.. அப்ப, தங்கைய விட்டே டாக்டர்கிட்ட அழைச்சிட்டுப் போகச் சொல்றா..''

''அப்படியா?''

''அப்படியேதான்.. இந்தாங்க மனோகரம்..''

''அட.. ஏது?''

''என் தம்பி பெண்டாட்டி கொடுத்தா.. திருநெல்வேலி மனோகரம்.. வாயில போட்டாலே கரைஞ்சிடும்.. சாப்பிடுங்கோ..''

''....''

''இது மாதிரிப்பட்ட பலகாரமெல்லாம் கண்ணால பார்த்தே வருஷக்கணக்காகி இருக்குமே. நாக்கு செத்துக் கிடக்காதா? சும்மா, தைரியமா சாப்பிடுங்கோ.. 'அச்சுதான்னு பாயைப் போட்டேன்; அனந்தான்னு தலைகாணியப் போட்டேன்.. கேசவா, மாதவா.. கிடக்காம கொள்ளாம, 'லடக்'குனு கொண்டு போ'ன்னு பெருமாளைப் பிரார்த்தனை செஞ்சுட்டே.. சாப்பிடுங்க..''

வைத்தியநாதன், அந்த மனோகரத்தின் மனோரம்யமான ருசியில் லயித்திருக்கும்போதே.. சம்பூர்ணம், பேச்சுவாக்கில் கூறுவதுபோல, தன் தங்கை பையன் வேலையில்லாமல் விருதாவாகப் பொழுதைக் கழிப்பதையும், அவனுக்கு ஒரு பியூன் வேலையாவது கிடைத்தால்.. அவள் தங்கை, தனக்குப் பிறக்கும் பேரக் குழந்தைக்குக் கூட வைத்தியநாதனின் பெயரை வைப்பாள் என்றும், நெக்குருகச் சொல்லி விடுவாள்.

கூடவே, ''அய்யே.. அந்த கொத்தவரங்காயை, எண்ணெயில்லாம, தேங்காயில்லாம ஒரு நாய் கூடத் திங்காது.. அதனாலதான் அதை வத்தலாப் போட்டு வச்சிருக்கேன்.. அடுத்த தடவை, உங்க தங்கை வீட்டுக்குப் போறப்ப, பொட்டலம் கட்டித் தர்றேன்.. பாவம், அவளுக்குத்தான் வேற யார் இருக்கா..'' - இப்படி தேனாய்ப் பேசி முடிப்பாள்.

வைத்யநாதன், சம்பூர்ணத்தின் தங்கை பையனுக்கு வேலை வாங்கித் தர, செல்போனில், தன் நண்பர்களிடம் உணர்ச்சிகரமாகப் பேச ஆரம்பித்து விடுவார்.. ''பாவம் சார்.. எங்க வீட்டு 'குக்'கோட சிஸ்டர்ஸ் சன்.. வெரி பிரில்லியன்ட் பாய்..''

உட்கார்ந்த இடத்திலிருந்தே காரியத்தை முடித்து விட்டாள் சம்பூர்ணம்! நாம் இன்ஷூரன்ஸ் ஏஜென்ட் மகேஸ்வரியிடம் பேச லாமா?

**நீ**ங்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய கேரக்டர் எல்.ஐ.சி ஏஜென்ட் மகேஸ்வரி.. பேசிப் பேசியே ஜெயிப்பவளாயிற்றே!

பொதுவாக, 'இன்ஷூரன்ஸ் ஏஜென்ட்' என்றாலே, அவர்களை சந்திக்கப் பயந்து காத தூரத்துக்கு ஓடுவார்கள் மக்கள். நானே ஓடி இருக்கிறேன். ('இந்தக் கதைதானே வேணாம்ங்கறது.. நீங்களாவது ஓடறதாவது..' என்கிறீர்களா.. ஒரு பேச்சுக்கு சொன்னேன்மா..) இத்தனைக்கும் அவர்கள், சேமிப்பின் அவசியத்தைத்தான் சொல்கிறார்கள் என்றாலும் நிறைய ஏஜென்ட்டுகளின் ஆரம்பமே, அபஸ்ருதியாகத்தான் இருக்கும்.



''மேடம்.. இன்னிக்கு நீங்க நல்லாயிருக்கீங்க.. நாளைக்கே ஒரு ஆக்ஸிடென்ட்.. இல்லே, ஹார்ட் அட்டாக்னு வச்சுக்குங்க..''

இப்படிப் பேசினால் ஓடாமல் என்ன செய்வது?

நான் சிறுமியாக இருந்தபோது, எங்கள் வீட்டுக்கு எதிர் போர்ஷனில் ஒரு எல்.ஐ.சி ஏஜென்ட் இருந்தார். தினமும் காலையில் தாத்தா, வாசல் கதவைத் திறந்து, பால் வாங்கும்போது அசரீரி மாதிரி ஒரே வார்த்தையை சொல்லி விடுவார்.

''குட்மார்னிங் சார்.. கடவுள் புண்ணியத்துல நல்ல நாளாவே இருக்கட்டும். ஆனா, நாளைக்குனு ஒண்ணு இருக்கோல்லியோ.. எது வேணுமானாலும் வரலாம்.. அதனால, ஒரு பாலிஸி எடுத்துக்குங்க.. எப்ப வரட்டும்?''

தாத்தா, பயங்கர கடுப்பாகி விடுவார்.

ஆனால்.. மகேஸ்வரி இப்படியெல்லாம் பேசவே மாட்டாள். எப்போதும் அகலமான சிரிப்பு. கல்யாணங்கள், பார்ட்டிகள், பிரிவியூ தியேட்டர் என எங்கே பார்த்தாலும் இருப்பாள்.

''ஹலோ.. எங்கே இந்தப் பக்கம்?''

''ஷாப்பிங்தான்.. வேற என்ன.. ஆமா, நீ..''

''அதுவா.. இங்கேதான் பக்கத்துல சுப்ரமணியம் தெருவுல பிருந்தான்னு ஒரு ஆன்ட்டி இருக்காங்க.. என்கிட்ட ஒரு பாலிஸி எடுத்திருந்தாங்க.. இருபது வருஷத்துக்கு.. அதுல என்ன விசேஷம்னா.. பாலிஸி எடுக்கறப்ப அந்த ஆன்ட்டிக்கு நாப்பது வயசு.. நான், அவங்களை கம்ப்பெல் பண்ணவே இல்லே.. யாரையும் வற்புறுத்தக் கூடாது.. அதுதான் என் பாலிசி. அவங்க நன்மைக்காக நாம சொல்றோம்.. எதிர்காலத்தைப் பத்தி அக்கறை இருக்கறவங்க கண்டிப்பா இன்ஷுரன்ஸ் பாலிஸி எடுத்துப்பாங்க. என்ன, நான் சொல்றது?''

''கரெக்ட்..''

''பிருந்தா ஆன்ட்டி பாலிஸி எடுத்தப்ப, நான் ஃபீல்டுக்கே புதுசு. 'இப்பவே வயசு நாப்பாதாயிடுச்சு.. ஒரு பத்து வருஷம் எடுத்துக்கட்டுமா?'னு கேட்டாங்க.. நான்தான், 'அது என்ன பத்து வருஷம்? இருபது வருஷத்துக்கு எடுங்க.. ஜாம் ஜாம்னு இருப்பீங்க.. என் கையாலேயே, முள்ளங்கி பத்தை மாதிரி பிரீமியத்தோட போனஸ்சும் சேர்த்துக் கொண்டு வந்து கொடுப்பேன்'னு சொன்னேன்.. அது என்னவோ தெரியல்லே.. என் வாக்கு எப்பவுமே பலிக்கும். அதே மாதிரி, பிருந்தாம்மாவுக்கு இப்ப போன மாசம்தான் அறுபது முடிஞ்சுது.. பாலிஸியும் முடிஞ்சிடுச்சு.. பத்து லட்சம் ரூபாய்க்கு செக் என் கையிலே..''

இந்த இடத்தில் கொஞ்சம் நிறுத்தி, கண்களைச் சிமிட்டி, அகலமாய் சிரிப்பாள் மகேஸ்வரி..

''பிருந்தாவுக்கு பத்து லட்சம்னா.. அதே தெருவுல இருக்கற டெய்லரோட பாலிஸி ஒரு லட்சம்.. எதுவுமே 'நடுவுல விட்டுப் போச்சு, லைஃப் முடிஞ்சு போச்சு'ங்கற விவகாரமே இல்ல.. நல்லதையே நினைப்போம்; நல்லதையே பேசுவோமே.. என்ன நான் சொல்றது?''

''ரொம்ப சரி..''

''ஆனா, நிறைய ஏஜென்ட்டுகளுக்கு இது புரிய மாட்டேங்குது மேடம்.. அத்தனை பேரும் என்னைப் பார்த்து வயிறெரியறாங்க.. ஆமா, உங்க பக்கத்துல இருக்கறவங்களை நீங்க இன்ட்ரொட்யூஸ் பண்ணலையே..''

''என் ஒன்றுவிட்ட மாமா பொண்ணு சுப்ரியா..''

''குட் நேம். அசப்புல பார்க்க சிம்ரன் மாதிரியே இருக்கீங்க.. என்ன பண்றீங்க? காலேஜ்?''

இதற்குள் சுப்ரியாவின் முகம் குங்குமமாய் சிவந்து விடும்..

''அய்யோ.. இல்லே.. எனக்குக் கல்யாணமாகி, ரெண்டு குழந்தைங்க கூட இருக்கு. நான் டீச்சரா இருக்கேன்..''

''பிராமிஸ்ஸா.. ரெண்டு குழந்தைங்களுக்கு அம்மான்னு சொன்னா, நம்பவே முடியல.. பசங்க.. பொண்ணா.. பையனா.. இல்லே, வெரைட்டிக்கு ஒண்ணா..''

''உம்.. ஆமா. பெரியவன் தேர்ட் படிக்கிறான். சின்னவ எல்.கே.ஜி..''

''ஸோ ஸ்வீட்.. அப்புறம் மேடம்.. எப்படி இருக்கீங்க? உடம்பு நல்லா இருக்கா இப்ப? அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி உங்க ஃபிரெண்ட் லீலாவதி ஹெல்த் இன்ஷுரன்ஸ் எடுத்தாங்க இல்லே என்கிட்ட.. சமீபத்துல இப்ப அது அவங்களுக்கு ரொம்ப யூஸ்ஃபுல்லா இருந்ததாம். என்னைக் கட்டிட்டு 'ஹோ'னு அழுதுட்டாங்க.. வயித்துல கிரிக்கெட் பால் அளவுக்கு மூணு கட்டியாம்.. இன்ஷுரன்ஸ்தான் கைகொடுத்தது. அவங்களோட ஹஸ்பண்ட், பசங்கள்லாம் கையைப் பிசைஞ்சப்ப.. நான்தான் ஞாபகப்படுத்தினேன். சமயத்துல, நம்ம பணமே இருந்தா. யார்கிட்டயும் போய் கையேந்த வேண்டியது இல்ல பாருங்க.. என்ன பேச மாட்டேங்கறீங்க?''

''நீ சொல்றது ஹண்ட்ரெட் பர்சன்ட் உண்மை மகேஸ்வரி.. நான் வரட்டுமா?''

''ஓ.. ஆமாமா.. நடுத்தெருவுல நிற்க வச்சுப் பேசிட்டிருக்கேன். ஒருநாள், உங்களோட பிஸிபேளாபாத் சாப்பிட வரணும்னு அப்பப்ப நினைச்சுப்பேன்.. வரலாமா? கூடாதா?''

''இது என்ன கேள்வி.. தாராளமா வா..''

இதற்குள் சுப்ரியாவின் கழுத்து சங்கிலி முகப்பை ஆராய்வாள்..

''ரொம்ப ஜோராயிருக்கு. அதுவும் உங்க கழுத்துக்கு பயங்கரமா ஸூட் ஆகுது.. நான் வரட்டுமா?''

அவள் கன்னத்தில் உரிமையோடு ஒரு தட்டு தட்டிவிட்டு, ஜோல்னா பை குலுங்க நகருவாள்..

''ஒரு நிமிஷம்..''

- சுப்ரியாதான். மகேஸ்வரி, இதை எதிர்பார்த்தவள் போலச் 'சட்'டென நிற்பாள்..

''மேடம் உங்க பேரைச் சொல்லலையே..''

''மகேஸ்வரி. மேடம் எல்லாம் வேண்டாம். நான் உங்க சிஸ்டர் மாதிரி..''

''தேங்க்ஸ்.. மகேஸ்வரி.. எனக்கு வயசு முப்பத்திரெண்டாறது.. இப்ப நான் லைஃப் இன்ஷூரன்ஸ் பாலிஸி எடுத்துக்கலாமா.. நான் வெறும் டீச்சராத்தான் இருக்கேன்.''

'நோ பிராப்ளம்.. உங்க ஹஸ்பெண்ட் என்ன பண்ணறாரு..?''

''ஒரு கம்பெனியில சாஃப்ட்வேர் அனலிஸ்ட்டா..''

''அது போதும்.. உங்களுக்கு பிரஷர், சுகர்.. ஏதாவது.. பார்த்தாத் தெரியல்லே..''

''அதெல்லாம் இல்ல..''

''பிறகென்ன.. ஐ அப்ரிஷியேட் யூ.. இது மாதிரி தானா முன் வந்து பாலிஸி எடுக்கணும். நாளைக்கு எனக்கு போன் பண்ணுங்க.. உங்க நம்பரையும் கொடுங்க. நீங்க மறந்தாலும் நான் மறக்காம உங்களைக் கூப்பிடுவேன். ஏன்னா, நீங்க இப்ப என் ஆள்! உங்களோட சுக, துக்கங்கள்ல இந்த மகேஸ்வரிக்கும் பங்கு உண்டு.. வரட்டுமா?''

இப்போது இந்த 'வரட்டுமா' சுப்ரியாவுக்குத்தான். எனக்கு இல்லை..
வீட்டுக்குப் போய்ச் சேர்வதற்குள் இன்னும் நாலு பாலிஸிதாரர்களை உருவாக்கியிருப்பாள் மகேஸ்வரி..

அடுத்தாற்போல, எப்போதும் கண்களில் வாட்டர் டாங்க் கட்டிவைத்து, அழுது அழுதே காரியத்தை சாதித்துக் கொள்ளும் பத்மபூஷணியை நீங்கள் பார்க்க வேண்டாமா?



**இ**ன்று நேற்றில்லை.. பத்து வயதிலிருந்தே பத்ம-பூஷணியின் ஆயுதம் அழுகைதான். அதுவும் தெம்பாக உட்கார்ந்து, கனமான குரலில் 'ஹோ'வென அழ மாட்டாள்! அது ஒரு மாதிரி ஊசல் அழுகை.. எப்போதும் தொண்டையில் துக்கமோ எதுவோ அடைத்தே இருக்கும். அவள் கண் இமைகளை அகல விரித்து நான் பார்த்ததே இல்லை. கண்களை இடுக்கிக் கொண்டு, பெரிய குடமிளகாய் மூக்கை அடிக்கடி உறிஞ்சிக் கொண்டேதான் பேசுவாள்.

பத்மபூஷணி, என் பள்ளித் தோழி. அவளுடைய நிஜப் பெயரை எழுதினால், ஆயுசுக்கும் அழுதுகொண்டே இருப்பாள். அதனால்தான் இந்தப் புனை-பெயர்!

பள்ளிக்கூட நாட்களில் பரீட்சை பேப்பரில் அரை மார்க், கால் மார்க் குறைந்தால் கூட இப்படித்தான்.. பிசுபிசுவென அழுதுகொண்டே டீச்சரின் முன் போய் நிற்பாள். எப்படியும் விக்கி, விம்மி, அந்த அரையே அரைக்-கால் மார்க்கை வாங்காமல் விட மாட்டாள்.

சரி, ஒழியட்டும். வயசாக ஆக சரியாகிவிடும் என்று-தான் எல்லாரும் நினைத்திருந்தோம்.. ஆகவில்லையே.

கல்யாணத்துக்கு முன்னாலேயே, ''மாப்பிள்ளையின் அம்மாவைப் பார்த்தால் பயமாக இருக்கிறது'' என்று

கண்ணைக் கசக்கினாள். பத்மபூஷணியின் தாயாரும் நாசூக்காக, சம்பந்தி அம்மாளிடம் மகளின் பயத்தைச் சொல்லி வைத்தாள்..

''ஹி.. ஹி.. அவ உடம்புதான் போத்தா வளர்ந்திருக்கே தவிர, குழந்தை மனசு.. உங்களைப் பார்த்து ரொம்பவும்தான் பயப்படறா..''

''அப்படியா.. நான் என்ன செய்யணும்?'' - அந்த அம்மாள், அப்பாவியாகக் கேட்டாள்.

''ஒண்ணும் செய்ய வேணாம். ஒரு ஆறு மாசம், ஒரு வருஷம் குழந்தைகளை அவங்க போக்குலேயே விடுங்க.. அதாவது, தனிக்குடித்தனம் வச்சுட்டு, நீங்க பாட்டுக்கு, 'கிருஷ்ணா.. ராமா..'னு கோயில் குளம் போயிட்டு வாங்களேன்.. அதுக்குள்ள, அவ பயமெல்லாம் போயிடும்..'' அவள் சொல்லும்போதே தூரத்தில் பத்மபூஷணி கலங்கிய கண்களுடன் உதடு பிதுக்கி, அழுவதற்கு தயாராக இருந்தாள்.

அதில் டெரர் ஆகிப் போன அந்த சம்பந்தி அம்மாள் பாவம்! சொன்னபடி செய்-தாள்.. கிட்டத்தட்ட ஒரு வருஷம்போல, கல்கத்தாவில் பெண் வீட்டில் இருந்து விட்டு பிறகுதான் வந்தாள். 'அதற்குள் பத்மபூஷணியின் 'மாமியார் பயம்' போய் விட்டதா?' என்று கேட்கிறீர்களா.. மாமியாருக்குத்தான் 'மருமகள் பயம்' வந்துவிட்டது.. 'எதற்கு எப்போது அழுவாளோ' என்கிற பயத்தில் அவளிடம் எதுவுமே கேட்பதில்லை அந்த அம்மாள்.

ஆனால், மூஞ்சூறு மாதிரி முகத்தை வைத்துக் கொண்டே போகிற இடத்திலெல்லாம் காரியத்தை சாதித்துக் கொள்ளும் பூஷணியின் சாமர்த்தியம் இருக்கிறதே.. அது, யாருக்கும் வராது..

வாசலில் தண்ணீர் லாரி வந்தால், அத்தனை பேரும் இவளுக்கு வழி விட்டு ஒதுங்கி நிற்பார்கள்..

''நீங்க முதல்ல தண்ணி பிடிச்சிட்டுப் போங்கம்மா.. இன்னும் உடம்பு சரியாகலையா.. முகமே சரியா-யில்லையே.. வேற யாராச்சும் வந்து தண்ணி பிடிக்க வேண்டியதுதானே..''

''எங்கே? யார் இருக்காங்க? அவருக்கு எட்டரை மணிக்கு ஆபீஸ். தண்ணி பிடிச்சிட்டிருந்தா ஸீட்டைக் கிழிச்சு, வீட்டுக்கு அனுப்பிடுவான்.. மாமியார் வயசான-வங்க..''

''உங்களுக்கு என்னங்க உடம்புக்கு? எப்பவும் அவஸ்தையோட வர்றீங்களே..''

''அது வந்து.. தலைச்சன் பொறந்தப்ப சிஸேரியன்..''

''அட, எனக்குக் கூடத்தான்..''

''சிஸேரியன் எல்லாருக்கும் நடக்கறதுதான்.. எனக்கு, குழந்தைய வெளில எடுத்தப்ப டாக்டர் மறந்துபோய் ஸ்டெதஸ்கோப்பை உள்ளார வச்சுட்டதா நர்ஸ் சொன்னா..''

''அய்யய்யே.. இது என்ன கண்றாவி?''

''கண்றாவிதான்.. நர்ஸ் சொன்னதைக் கேட்டு, பயந்து போய், டாக்டர் என் வயித்தை மறுபடியும் கிழிச்சாங்க.. அக்கா.. உங்க குடத்துக்கு அடுத்தாப்பல நான் பிடிச்சிட்டுப் போயிடட்டுமா.. வீட்டுல குக்கர் சத்தம் போடுது..''

''ஏன்.. மாமியார் கெயவி, அடுப்பை அணைக்க மாட்டாளா..''

''அதுக்கெல்லாம் நான் கொடுத்து வைக்கலே அக்கா..''

''சரி, சரி.. அயுவாதே.. குடத்தை வையி..''

இதே கதைதான்.. காய்கறி வாங்குவதிலிருந்து ரேஷன் கடை வரைக்கும்..

''அது என்னது.. மலைப்பழமா?''

''ஆமா.. திருச்சி சிறுமலைப்பழம்.. வேணுமா?''

''என்ன விலை?''

''டஜன் நாப்பத்தஞ்சு ரூபா..''

''அதுக்கெல்லாம் பெரிய மனுஷங்க, காருலே வருவாங்களாயிருக்கும். எனக்கு பூவன் பழமே கொடு..''

''அட, நீ ஒரு விலை கேளு..''

''எதுக்கு.. அப்புறம் என்னை நீ திட்டறதுக்கா.. எனக்கு பத்து வயசா இருக்கறப்ப, எனக்குப் பிடிக்குமேனு எங்க அப்பா, சீப்பு சீப்பா மலைப்பழம் வாங்கிட்டு வருவார். உம்.. அதெல்லாம் பொறந்த வீட்டுல செல்லமா வளர்ந்தப்ப நடந்தது.. இப்ப நான் ஆசைப்படலாமோ..''

''தே.. என்னாத்துக்குக் கண்ணு கலங்கறே.. பொறந்த வீடுங்கறது ஒவ்வொரு பொம்பிளைக்கும் நாப்பது வயசுக்கு மேல அதிர்ஷ்டம் இருந்தாத்தான்.. போனாப் போவுது.. உனக்காக நாப்பது ரூபாய்க்குத் தர்றேன்..''

''நீ மகராசியா இரு தாயே.. உன் மனசு யாருக்கு வரும்? போன ஜென்மத்துல நீயும், நானும் அக்கா தங்கச்சியா இருந்திருப்போம். ஆனா, எனக்காக நீ அஞ்சு ரூபா நஷ்டப்பட வேண்டாம். நான் காய் வாங்கறதுக்கே அம்பது ரூபாதான் எடுத்துட்டு வந்தேன். அதுல நாப்பது ரூபா பழத்துக்கு செலவழிக்கிற அளவுக்கு வசதியான ஜாதகம் இல்லே என்னுது..''

''அப்ப அரை டஜன் வாங்கு..''

''அதை வாங்கறதும் ஒண்ணுதான். வாங்காததும் ஒண்ணுதான். வீட்டுல ஒரு வயசான கிழம் உட்கார்ந்-திருக்கு. அதுக்கே அரை டஜன் காலியாயிடும். விடு. என் கதையக் கேட்டா, உனக்குமே உலகம் வெறுத்துப் போயிடும். பூவன் ஒரு டஜன் எடு..''

''என்னம்மா இது.. காலை நேரத்துல மனசை ஒரு மாதிரி 'டல்'லாக்கிட்டே.. இந்தா.. எடுத்துக்க.. இருபத்தஞ்சு ரூபா கொடு. ஒரு நாளைக்கு நானே, செத்துப் போன எங்காத்தாவை நினைச்சிட்டு, பசு மாட்டுக்குப் பழம் கொடுத்தேன்னு எண்ணிக்கிறேன்.. நீ கொடுக்கறதைக் கொடு..''

ஒரு பழக்காரியைக் கூட இளக்கிவிடும் பத்மபூஷணி--யின் கலங்கிய கண்களும் பிதுங்கின உதடும். இன்று-வரை இப்படியேதான் இருக்கிறது.. ஒருபடி மேலே வேண்டுமானாலும் போய்விட்டதாக என்னுடைய இன்னொரு சிநேகிதி சொல்கிறாள்.

காரணம்.. தன் பையனுக்கு கல்யாணம் செய்திருக்-கிறாளே.. இவள் முகத்தை பார்த்து எதையும் அறிய முடியாத கல்யாணப் பெண்ணின் வீட்டில் நூற்றியோரு முறுக்கு, அதிரசம் என்று சாற்றியிருக்-கிறார்களாம்.

''அவளுக்கு லட்டு மாலையே போட்டாலும் கண்ணைக் கசக்கிட்டுத்தாண்டி நிற்பா.. இப்பிடி அழுது எல்லா இடத்துலயும் காரியம் சாதிக்க முடியாது. வீட்டோட இருக்குறதால பரவால்ல..'' - இப்படிச் சொல்பவர் அனந்தநாயகி அம்மாள்.. பத்மபூஷணிக்கு நேர் எதிர். இடிச் சிரிப்பு காதில் விழுகிறதா?

இந்தம்மாளைப் பற்றியும்..

**அ**னந்த நாயகிக்கு ஆனந்த நாயகி என்றே பெயர் வைத்திருக்கலாம்.

நாற்பத்தியேழு வயசாகிறது அவளுக்கு.. கொஞ்சம் குள்ளமாக, உருட்டிவிட்ட குஞ்சாலாடு மாதிரி இருப்பாள். உச்சந்தலையிலிருந்து, உள்ளங்கால் வரை ஒன்றும் சரியில்லை. பாதி நாள் ஆஸ்பத்திரியில்.. மூக்கில் டியூபைச் செருகிக் கொண்டு, 'புசு புசு' வென மூச்சு விட்டுக்கொண்டுப் படுத்திருப்பாள். ஆனால், சிரிப்பு மட்டும் ஓயாது.. அனந்த நாயகியின் பலமே அவளது நகைச்சுவை உணர்வும் சிரிப்பும்தான்.

''என்ன டாக்டர் கதிரேசன்.. சௌக்கியமா.. போன தடவைப் பார்த்ததுக்கு இப்ப, தலையில நிறைய இடம் ஃப்ளாட் போட்டு விற்கலாம் போல இருக்கே.. என்ன ஆச்சு? வீட்டம்மா அனுசரணையா இருக்காளா இல்லையா.. எதுக்கு கேட்கறேன்னா..''



சொல்லிவிட்டு கெக்.. கெக்.. கெக்கவென சிரிக்கிறாள்.

டாக்டருக்கும் சிரிப்பு வரும்தான். ஆனால், சிரமப்பட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டுச் சொல்லுவார்..

''நல்லா மூச்சை இழுத்து விடுங்க..''

''நான் விடத் தயார். அப்புறம் என் ஹஸ்பெண்டை யார் கவனிச்சுக்கறது.. இப்பவே, எனக்குத் தெரிஞ்சும் தெரியாமலும் தீர்த்தவாரி பண்ணிட்டிருக்கார். வாட்டர் டேங்க் மாதிரி இருக்கற அவர் தொப்பை அப்புறம் செப்டிக் டேங்க் மாதிரி நாறிப் போயிடாதா..''.

மறுபடியும் இடியெனச் சிரிப்பு.. அனந்த நாயகியின் கணவரோ அவளது பேச்சையும் சிரிப்பையும் நிறுத்த முடியாமல் நெளிவார்.

''மிஸஸ் அனந்த நாயகீ.. இனிமே எண்ணெயே கூடாது. உப்பு கூட பாதியாக்கிருங்க.. நீங்க தொண்ணூறு கிலோ இருக்கீங்க. பாதியாக் குறைங்க.. பசிக்கறப்ப..''

இப்படி டயட்டீஷியன் டோரதி சொல்லிக் கொண்டே போனால், 'லபக்'கென அவளது வலது கை விரலைப் பிடித்துவிடுவாள்.

''இந்தா.. ரொம்ப ரெஸ்டிரிக்ட் பண்ணினா, அப்புறம் உன்னை கடிச்சித் தின்னுடுவேன்..''

- டோரதியின் முகத்தில் வெளிச்சம் போட்டாற் போலச் சிரிப்பு..

''கொஞ்சம் பொறுங்க.. உங்களுக்கு வேற எதெல்லாம் சாப்பிடலாம்னு பார்த்துச் சொல்றேன்..''

டோரதி ஏதோ ஃபைலைப் பார்க்க, அனந்த நாயகி அவளையே உற்றுப் பார்ப்பாள்.

''ஆமா.. இது என்ன நாலாம் மாசமா?''

''எப்படிக் கண்டுபிடிச்சீங்க..''

''நான் அஞ்சு குழந்தை பெத்திருக்கேன்.. எனக்குத் தெரியாததா.. மசக்கைக்கு எலுமிச்சை ஊறுகாய், மாங்காய் தொக்கு இதெல்லாம் சாப்பிட்டாத் தேவலை போல இருக்குமே..''

- டோரதியின் தலை நாணத்தினால் கவிழும்.

''ரெண்டு நாளுலே டிஸ்சார்ஜ் ஆகி, அடுத்த வாரம், 'அவுட் பேஷன்ட்'டா வருவேனில்லையா.. அப்ப ஊறுகா எடுத்துட்டு வர்றேன்..''

''ஆமா, உங்களை யாரு டிஸ்சார்ஜ் செய்யப் போறாங்க?''

''பின்னே.. எத்தனை நாளைக்குத்தான் உங்க டாக்டர், என் குண்டு மூஞ்சியையே பார்த்துட்டு இருப்பார்.. அவர் பார்க்க ரெடின்னாலும் நான் தயாரா இல்லேம்மா.. அஜீத், மாதவன் மாதிரி இளமையான டாக்டர்களே இல்லையா.. பார்த்துப் பார்த்துப் போரடிக்குது..''

மறுபடியும் சிரிப்பு.

சொன்னபடியே அடுத்தவாரம் ஆஸ்பத்திரியைவிட்டு, மூங்கில் கூடை, டிபன் கேரியர், தண்ணீர் பாட்டில் சகிதம் டிஸ்சார்ஜ் ஆகிவிடுவாள் அனந்த நாயகி.

''டாக்டர், உடம்பைப் பார்த்துக்குங்க.. வீட்டுல அநாவசியமா சண்டை வச்சுக்காதீங்க.. அடுத்த தடவை உங்களைப்

பார்க்கறப்ப, உங்க முகம் 'பளிச்'னு பிரகாசமா இருக்கணும்..''

டாக்டர் ஸ்தம்பித்து நிற்பார். மூச்சு இழுத்துக் கொண்டிருந்த சுவடே தெரியாமல் 'விசுக் விசுக்'கென நடந்து போவாள்.
போகும் வழியில் ஹெட் நர்ஸிலிருந்து வார்டு பாய் வரை அத்தனை பேரிடமும் சிரித்தபடி விடைபெறும் அழகு இருக்கிறதே..

''என்ன பழனி.. இன்னிக்கு உனக்கு நைட் ஷிஃப்ட் இல்லையோ..''

''மேரி.. உன் லவ் மேட்டர் எந்த அளவுல இருக்கு? என் ஐடியாவை ஃபாலோ பண்ணினியா..? இன்னும் இல்லையா! மண்டு, மண்டு.. இதுலல்லாம் ஸ்பீட் வேணும். 'மச மச'னு இருக்கப்படாது..''

''ஆமா.. டாக்டர் கல்யாண ராமனும், டாக்டர் மஞ்சுளாவும்.. (கெக்கலிட்டு சிரித்தபடி) என்ன ஆச்சு? லவ்தானே.. நான் அப்பவே கண்டுபிடிச்சு சொன்னேன் பார்த்தியா?''

''ஏய் நாகு.. முகத்துல தனி மெருகு ஏறியிருக்கு? மாமியார் ஊர்லே இல்லையா.. பரவாயில்ல.. என்கிட்டச் சொல்லு..'' என்கிறபோதே செல் ஒலிக்கும்..

''ஏண்டீ சுமி.. நான் இல்லாதப்ப, நார்த்தங்கா ஜாடியத் திறந்து, கிளறிவிட்டியா.. மாட்டியே.. அது பாட்டுக்கு வேடு கட்டிக்கிட்ட துபாய் ஷேக் மாதிரி நிக்குமே..''

''பார்வதீ.. நாளைக்கு நாரதகான சபாவுல யார் கச்சேரி.. நான் வர்றேன்..''

- ஆரஞ்சு ஆர்லிக்ஸ் பாட்டிலோடு கொஞ்சம் லேட்டாக வந்தவர்கள் அவளைப் பார்த்து விக்கித்து நிற்பார்கள்.
''ஆமா.. என்னது எல்லாருமா ஒண்ணாச் சேர்ந்து வந்திருக்கீங்க.. என்ன விசேஷம்?''

அப்போதுதான், நினைப்பு வந்தாற்போல வந்தவர்கள் ஒருவரையருவர் பார்த்துக் கொள்வார்கள்.. எவளாவது ஒருத்தி இழுப்பாள்:

''ஆமா.. நீ ரொம்ப உடம்பு சரியில்லாம..''

''யார் சொன்னது?''

''உன் ஹஸ்பெண்ட், உன் மருமக எல்லாருமே.. ஏன், என் பெரியப்பாவோட சம்பந்தி கூட நீ ஐ.ஸி.யூ-ல இருக்குறதா..''
''யாருக்குத்தான் இந்தக் காலத்துல உடம்பு நல்லா இருக்கு? அதெல்லாம் அப்படித்தான்.. ஒண்ணு நேராயிருந்தா - இன்னொண்ணு கோளாறாயிடும். அதுக்காக பயப்படலாமா?''

அனந்த நாயகியின் லாஜிக்கே தனிதான். அவள் சிரித்துச் சிரித்தே எமனுக்கே 'டேக்கா' கொடுத்துக் கொண்டிருக்கிறாள் என்றால்..

வீட்டுக்குள்ளேயே இருந்தபடி - பல குடும்பங்களின் பிரச்னைக்குத் தீர்வு சொல்லும் 'லா பாயின்ட்' லீலாவைத் தெரிந்துகொள்ள வேண்டாமா?

அவளைப் பற்றியும்..

**'லா** பாயின்ட்' லீலாவுக்கு பஞ்சாயத்துப் பண்ண, அரசமரத்தடியும் தோளில் துண்டும்தான் இல்லையே தவிர, அந்த மிடுக்கு, தோரணை அப்படியே உள்ளது. என்ன பிரச்னையாக இருந்தாலும் சாதுர்யமாகப் பேசி, சுபமாக முடித்து வைத்து விடுவாள்.

ஒரு நாள் இஸ்திரி போடும் பெண், இவள் புடவை ஒன்றைத் தொலைத்து விட்டாள் என்று விசாரணை..



''நீல கலர் புடவை.. உன்கிட்டத்தான் போட்டேன் பார்வதி.. எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு..''

''இருந்தா எங்கே பூடும்? புடவையை எல்லாம் திருடுற புத்தி எனக்கோ எங்க வூட்டுக்காரருக்கோ கிடையாது..''

''உன்னைத் திருடினேனு சொன்னேனா..எங்கேயாவது மறந்து விட்டிருக்கலாம் இல்லையா?''

''அதெல்லாம் இல்ல. நீ இஸ்திரிக்குப் போட்டே இருக்க மாட்டே. பீரோவுலயே நல்லாத் தேடிப் பாரு..''

இஸ்திரி போடுகிறவள் வீம்பாகச் சொன்னாள்.

''த்ச்.. சரி விடு.. அது ராசியில்லாத புடவை. எப்ப அதை உடுத்தினாலும் எதாவது கெட்ட செய்தி வரும். அதான்.. தானா போயிடுச்சு. மத்தபடி உன்னைப் போய்ச் சொல்வேனா.. உனக்கென்ன.. புடவை வேணும்னு கேட்டா, நல்ல புடவையா நானே கொடுத்துட்டுப் போறேன்..''

பார்வதி பேய் முழி முழித்தாள். அடுத்த அரை மணி நேரத்தில் கையில் புடவையுடன் வந்தே விட்டாள்.. ''இதுதானா பாருங்க.. என் வீட்டுக்காரர்தான் ஆறாம் நம்பர் வூட்டுல கொடுத்திருக்காரு..''

''அதான் நானும் சொன்னேன். சரி.. கொஞ்சம் இரு. உனக்குனு ஒரு ஷிஃபான் புடவை வச்சிருக்கேன். புதுசு. நான்தான் இதெல்லாம் கட்ட மாட்டேனே!''

லீலா உள்ளே போய் எந்தக் காலத்திலோ வாங்கிய அந்த ஷிஃபான் புடவையை எடுத்து அழகாக ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டுக் கொடுத்தாள். அவள் வாயெல்லாம் பல்லாகப் போனதும் என்னிடம் சொன்னாள்..

''புடவை மேல ஆசைப்பட்டுட்டா. அது ராசியில்லைனு சொன்னதும் யோசிச்சிருக்கா.. வேற புடவை தர்றேன்னு சொன்னேனா.. என் புடவை வந்துடுச்சு..''

நான் அசந்துபோய் நிற்பேன். இது இப்படியானால்.. சொந்தக்காரப் பாட்டி ஒருத்தி, இவளிடம் வந்து தன் கஷ்டத்தைப் புலம்பினாள்.. ''என் பசங்களை என்னோட நூறு பவுன் நகையை வித்துப் படிக்க வச்சேன்.. இப்ப என்னை முதியோர் இல்லத்துல..!''

''அழாதீங்க அத்தை. நான் என்னனு கேக்கறேன்..''

''ஐயோ! போட்டுக் கொடுத் துட்டியானு திட்டுவாங்கடி..''

''கவலைப்படாதீங்க.. நான் பார்த்துக்கறேன்''

ஒரு நாள் லஞ்ச்சுக்கு பாதாம் கேக், பிரியாணி, வாழைப்பூ வடை எல்லாம் செய்து, எலியைப் பொறிக்குள் மசால் வடை வைத்துப் பிடிப்பது போல பிடித்து விட்டாள் பாட்டியின் பிள்ளைகள் இருவரையும்! ''பிச்சுமணி என்னடா.. தலையெல்லாம் நரைச்சுப் போச்சு? ஆமா.. உன் பையன் என்ன படிக்கிறான்?''

''கோயம்புத்தூர்ல இன்ஜினீயரிங்..''

''வெரிகுட்! வெங்கு.. அப்படியே இருக்கியேடா.. ஆமா, உனக்கு ஒரு பையன் உண்டோல்லியோ...''

''ஆமா. அவன் 'மணிப்பல்'லே படிக்கிறான்.. பல் டாக்டருக்கு..''

''பிச்சுமணி.. பிரியாணியில மசாலாவெல்லாம் சரியா இருக்கா? உங்கம்மாதான் புலம்பிட்டே இருந்தாங்களே.. என் பிள்ளைக்கு மசாலா மட்டா இருக்கணும்னு.. உங்க குழந்தைகளே வளர்ந்து காலேஜிலே படிக்கிறாங்க. உங்க அம்மாவுக்கு இன்னும் தன் பசங்க குழந்தைங்கன்னு நினைப்பு.. ஹ்ம்! அந்தக் காலத்துல உங்க காலேஜ் அட்மிஷனுக்கெல்லாம் நகை, நட்டை வித்து எத்தனை கஷ்டப்பட்டிருக்காங்க. பாவம்.. ஆமா! உங்க பசங்களுக்கு

காலேஜ் அட்மிஷன், ஹாஸ்டல்னு நிறைய செலவாகி இருக்குமே.. என்ன செஞ்சீங்க?''

''எஜுகேஷனல் லோன்தான்!'' - ஒருமித்த குரலில் சொன்னார்கள் இருவரும்.

''லோனா? அதுக்கு வட்டி யார் கட்டறாப்பல..''

''ஏன், நாங்கதான். பசங்க படிச்சு வந்தா போதுமே! வட்டியெல்லாம் பெரிய விஷயமா.. அவங்களே சம்பாதிச்சு, கடன் மொத்தத்தையும் அடைச்சிடுவாங்க. நம்ம குழந்தைகள்.. நாளைக்கு அவங்களை விட்டா, நமக்கும்தான் யார் இருக்கா?''

''அதெப்படி அப்பிடிச் சொல்ற.. உங்க பசங்க உங்களை மாதிரியே பெத்தவங்களை முதியோர் இல்லத்துக்கு அனுப்பணும்னு முடிவு செஞ்சா.. இதை உங்கம்மா குத்தமாச் சொல்லல. 'நல்ல இல்லமா' பார்த்து சொல்லச் சொன்னாங்க. நிஜமா நான் நம்பல. நம்ம பிச்சுமணியும் வெங்குவுமா சொன்னாங்கன்னு.. சரி, சரி.. எழுந்திருக்காதே.. இன்னொரு வடை போட்டுக்க.. வெங்குவுக்கு வாழைப்பூ வடை பிடிக்கும்னுகூட உங்கம்மாதான் ஞாபகப்படுத்தினாங்க..''

இருவருக்குமே துக்கம் தொண்டையை அடைத்தது. இருந்தாலும் ''எங்க ரெண்டு பேர் வீட்டுலயுமே அம்மாவை வெச்சுக்க முடியாது லீலா. எங்க பெண்டாட்டிகளுக்கும் அம்மாவுக்கும் சரிப்பட்டு வர்றதில்ல..'' என்றான் பிச்சுமணி.

''சரி.. அம்மாவை வெச்சுக்க முடியலைன்னா, ஒண்ணு செய்யுங்க. ரெண்டு பேரும் தலைக்கு அஞ்சு லட்சம் அம்மாவுக்குக் கொடுத்திருங்க..''

''பத்து லட்சமா.. எதுக்கு?''

''எதுக்கா? நூறு பவுன் நகையை வித்துத்தானே உங்கம்மா உங்களைப் படிக்க வச்சாங்க.. என்ன செய்ய? எஜுகேஷனல் லோன் எல்லாம் அந்தக் காலத்துல இல்ல. இருந்திருந்தாலும் அதைப் பத்தித் தெரிஞ்சுக்கற அளவுக்கு எஜுகேஷனும் அவங்களுக்கு இல்ல.. இன்னிக்கு பவுன் கிட்டத்தட்ட பத்தாயிரம் ரூபா.. நூறு பவுன்னா, பத்து லட்சம் ரூபா! இல்லையா?''

''என்ன லீலா இது.. இந்த மாதிரி பேசறே?''

''பிச்சுமணி.. ஒரு காலத்துல நாம எல்லாரும் ஒண்ணா வளர்ந்தோம்.. உங்களோட போட்டி போட்டுக்கிட்டு உங்கம்மா கைத் தயிர் சாதத்தை வாங்கிச் சாப்பிட்டவ நான். 'என் கூடவே இருந்துடுங்க'னுதான் சொல்றேன்.. 'மாட்டேன்'ங்கறாங்க.. 'நாளைக்கு என் பிள்ளைகளை ஊர் ஒரு சொல் சொன்னாலும் தாங்காதுடீ'னு அழுறாங்க. நீங்க விரட்டினாலும் பாசம் கிடந்து.. டேய்.. டேய்.. என்னடாது.. அழுறியா? இலை முன்னாடி உக்காந்து அழாதே.. என் சமையல்தான் நல்லா இல்லையோனு பார்க்கிறவங்க நினைச்சுப்பாங்க..''
கிண்ணத்தில் ஐஸ்கிரீம் கொடுப்பதோடு, மனைவிகளை சரி பண்ணும் மந்திரத்தையும் சொல்லித் தருவாள் லீலா. சிரிப்பும் கண்டிப்பும் பாசமுமாகக் கலந்து பஞ்சாயத்துப் பண்ண அவளால் மட்டுமே முடியும்..

அடுத்து நம்ம லேடீஸ் டைலர் 'கஜலட்சுமி'யைப் பற்றி..

**க**ர்ணனுக்கு கவச குண்டலம் மாதிரி கஜலட்சுமி துணிகளுடன் பிறந்திருப்பாளோ என்று தோன்றும். மகள் பெரிய டெய்லராகி, கஜம் கஜமாய் வாடிக்கையாளர்களின் துணிகளை விழுங்கி, பெரிய டெய்லரிங் ஷோரூமே வைப்பாள் என்பதை முன்கூட்டியே அறிந்துதானோ என்னமோ.. அவள் அப்பா 'கஜ'லட்சுமி என்று பெயரிட்டிருக்க வேண்டும்.

அவள் அப்படி என்னதான் தைக்கிறாளோ.. கூட்டம் அவள் கடையில்தான் குவியும். அந்த நாளைய பத்மினி, வைஜயந்தி, சரோஜாதேவி முதல் இன்றைய அசின் வரை.. அத்தனை நடிகைகளின் தோளிலும் இவள் கை போட்டுக் கொண்டு சிரிக்கும் போட்டோக்கள் கடைச் சுவரை அலங்கரிக்கும். இதன் நடுவில் தையல் கலைக்காக சிட்னியிலிருந்து சின்னக்காபாளையம் வரை.. இவள் வாங்கிய பட்டங்கள் யார் யாரோ தந்தது.. போகட்டும். தொழிலுக்கு அதெல்லாம் தேவைதானே..!



ஆனால், ஒன்று மட்டும் தெரியவில்லை. பள்ளிக்கூட வாசலையே மிதித்திராத கஜாவுக்கு பேசக் கற்றுக் கொடுத்ததுதான் யார்?

''வா கண்ணு.. பிளவுஸ் போட்டுப் பார்த்தியா.. எப்படியிருந்தது..?''

''போங்க கஜலட்சுமி.. ரொம்ப லூஸா இருக்கு..''

''அப்படியா.. இருக்காதே.. கட்டிங் எல்லாம் நான்தானே.. அளவு எடுத்துத்தானே தைச்சேன்.. ஆங்.. இப்ப கண்டுபிடிச்சிட்டேன்..''

''என்னது..''

''நீ இளைச்சிட்டேடா..''

''என்னது.. இளைச்சிட்டேனா..''

''ஆமா.. பார்த்தாத் தெரியல.. ஆனா, நீ இளைச்சிட்டே.. உடம்பை நல்லா வச்சுக்க.. இப்பவே இப்படி இருந்தா எப்படி?''

உடனே அவளுக்கு, உடம்பு ஒரு சுற்று பெருப்பதற்கான உற்சாக டிப்ஸை இலவசமாக அள்ளி வீசுவாள் கஜலட்சுமி.

அதேபோல, பொருந்தாத ஒன்றைத் தைத்துக் கொடுத்து விட்டு, அந்த கஸ்டமருக்கு வேறு மாதிரியான உபதேசம்..

''மேடம்.. சொல்றேனேனு தப்பா நினைச்சுக்காதீங்க. துணி எடுக்கறப்ப, பத்து இருபது போனாலும் நல்ல துணியா வாங்கப் பாருங்க. இது மாதிரி துணியில ரவிக்கை தச்சுப் போட்டுக்கணும்னு உங்களுக்கு என்ன தலையெழுத்து?''

நாலு பேருக்கு நடுவில் கஜலட்சுமி இப்படி கேட்கும் போது அந்தப் பெரிய மனுஷி திணறி வழிவாள்..

''இது.. யாரோ வெத்தலை பாக்குல வச்சுத் தந்தது. கலர் நல்லாயிருக்கேனு..''

''நோ மேடம். அந்த மாதிரி விஷப் பரீட்சையில இறங்காதீங்க. கஸ்டமருக்கு உண்மையா இருக்கணும்ங்கறதுக்காக, இந்தத் துணியிலயும் நான் தச்சேன். யூ ஸீ.. என் மிஷின் எல்லாம் ஃபாரீன்ல இருந்து வந்தது.. மட்டமான துணியை 'த்தூ'ன்னு துப்பிடும். சொன்னா நீங்க நம்ப மாட்டீங்க. இந்த மாதிரி 'தேர்ட் கிரேட் குவாலிடி' துணிங்கள நான் விரலாலகூடத் தொடறதில்ல..''
இதற்கு மேலும் அந்தக் கடையில் நிற்க, ரவிக்கை சொந்தக்காரிக்கு என்ன பைத்தியமா..

இவள் துணிகளை தாறுமாறாகத் தைப்பதால் எப்பவுமே இவள் இப்படித்தான் எனத் தப்பாக எடை போட்டு விட வேண்டாம் சகோதரிகளே.. ஓரிரண்டு சமயங்களில் அத்திப் பூத்தாற்போல நன்றாகத் தைத்து விடுவதும் உண்டு. எனக்கேகூட அப்படிச் செய்திருக்கிறாள்.

''போறது போ.. இந்தத் தடவை ஒழுங்காவே தச்சிருக்கே கஜா..''

''என்னோட பத்து வயசுலருந்து உங்களை பார்த்துட்டிருக்கேன்.. இன்னிக்கு சித்தப் பூசினாப்பல இருப்பீங்க. அடுத்த மாசமே கொடி மாதிரி(!) இளைச்சிருவீங்க. திடீர்னு பாத்தா டயர் கணக்கா ஆயிடுவீங்க.. உடம்பு உங்களுக்கு ஒரு ஸ்டெடியா இல்லியே?''
''அது சரி.. என் பொண்ணு சுடிதாருக்கு 'பாஸ்கெட் நெக்' வைக்கச் சொன்னாளாம்.. நீ 'ப' கழுத்து வச்சிட்டியாமே..''

''அட, உங்க பொண்ணோட சுடிதாரா அது.. போன வாரம் முழுக்க த்ரிஷாவுக்கு.. ராப்பகலா கண் முழிச்சு அம்பது டிரெஸ் தச்சேன்.. என்னக்கா சிரிக்கறீங்க.. நம்ப மாட்டேங்கறீங்க இல்லே? என் அசிஸ்டென்ட்டைக் கேட்டுப் பாருங்க.. அதோட கூட, உங்க பாப்பாவோட சுடிதாரையும் தச்சிட்டேன்..''

''....''

''சத்யமாச் சொல்றேங்க்கா. உங்க பாப்பாவுக்கு நல்ல டிரெஸ் சென்ஸ். தேடிப் பிடிச்சு வாங்கி இருக்கு. இதெல்லாம் த்ரிஷாவோட டேஸ்ட்.. பாப்பாகிட்ட சொல்லுங்க..''

பேசிப் பேசியே தன்னைச் சுற்றி, வயது வாரியாகப் பெண்களை மடக்கிப் போட்டு, நூறு இருநூறு என்று தையல் சார்ஜில் தீட்டி விடுவாள். ஆனால்.. எத்தனை பழகினாலும் லாரி லாரியாய் அளப்பதுதான் தர்மசங்கடமாக இருக்கும்.
''அக்கா.. தீபாவளிக்கு ரெண்டு மாசம் இருக்கறப்ப பிளவுஸை கொண்டு வந்து கொடுக்காதீங்க. மத்தவங்களோடது மாதிரி இல்ல உங்களுது. நிறைய வேலை வாங்கும்..''

''சரிதான் போ. நான் வேற எங்கேயாவது..''

''கொடுத்துடுவீங்களா.. நான் காஜா எடுக்கறப்ப, எத்தனை தடவை என் எதிர்ல வந்து நின்னு, 'பட்டன் தச்சுத் தா'னு கேட்டிருக்கீங்க? நானும் எத்தனை தச்சிருக்கேன். பாருங்க, இதைச் சொல்றப்பவே நீங்க மெல்ட் ஆகிறீங்க இல்லே? அதான் பாசம்ங்கறது.. நாம என்னத்த கொண்டு வந்தோம்.. என்னத்த கொண்டு போப் போறோம்.. போயும் போயும் ஒரு பிளவுஸால நம்ம உறவு விட்டுப் போயிடுமா என்ன.. அக்கா, அறுநூத்து சொச்சம் ரூபா கொடுத்திருக்கீங்க. பாப்பா சுடிதாருக்கு லைனிங் ஒரு முந்நூறு.. இருந்தாக் கொடுங்க. இல்லாட்டி பரவால்ல.. எங்க போகப் போறோம்.''

நான் எப்போது கடைப் பக்கம் போனாலும் சிரித்த முகத்தோடு ''வாங்க அக்கா'' என்று வாய் நிறைய வரவேற்பாள் கஜா. ''எங்கே காணுமேனு நினைச்சேன்.. நிசம்மா.. என் அசிஸ்டென்ட்டை வேணா கேளுங்க..''

பதினாலு வயசுக்கு கச்சலாய் இவளது அசிஸ்டெண்ட் பரமார்த்தியாய் சிரிப்பாள்.

வாடிக்கையாளரைப் பார்த்து சிரிக்கக் கற்றுக் கொடுத்திருக்கிறாள் கஜலட்சுமி. இன்னும் பத்து வருஷத்தில் இவளை முழுசாய் இன்னொரு கஜாவாக்கி விடமாட்டாளா என்ன..

அதுதான் ஏற்கெனவே சொன்ன மாதிரி.. பேசி ஜெயிக்க, படிப்பு மட்டும் போதாதுங்க.. கொஞ்சம் சமர்த்தும் கூடவே சாமர்த்தியமும் வேண்டும்!

நிறைந்தது